Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 018 | திங்கட்கிழமை | கார்த்திகை 29 ஆம் நாள் 14 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## 655 பேருக்கு தொற்று!

கொழும்பு, டிசெ.14
இலங்கையில் நேற்றும் 655 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.
கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் (மினுவாங்கொட, பேலியகொட, சிறைச்சாலை கொத்தணிகள்) 19

## கொரோனா காவு 152

கொழும்பு, டிசெ.14
இலங்கையில்கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார்.
62 வயது பெண் மற்றும் 71, 76 வயதுகளையுடைய இரு ஆண்களே உயிரிழந்துள்ளனர். அதையடுத்து நாட்டில் 19

## எத்தனை பேருக்கு தொற்று?

யாழ்ப்பாணம், டிசெ.14
நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 6 என யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி அறிவித்திருந்த நிலையில், வடக்கு மாகாணத்தில் 19



மருதனார்மடம் கொரோனாக் கொத்தணியை அடுத்து உடுவில் பிரதேச செயலர் பிரிவு நேற்றுமுன்தினம் இரவிலிருந்து உடன் நடைமுறைக்கு வரும் வகையில் முடக்கப்பட்டது. அத்தியாவசிய சேவை தவிர்ந்த ஏனைய சேவைகள் யாவும் முடக்கப்பட்டன. (ஒ.இ)

# நீக்கப்பட்டது 'லொக்டவுன்'

யாழ்ப்பாணம், டிசெ.14
உடுவில் பிரதேச செயலக பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீக்கப்பட்டு, அந்தப் பிரதேசம் விடுவிக்கப்படுகின்றது என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் அறிவித்துள்ளார்.
நேற்றைய பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளியாகி, 26 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட பின்னர், நேற்று இரவு 10.30 மணியளவில் அவர் இந்த அறிவித்தலை விடு 19

# யாழ்ப்பாணத்தில் 26 பேருக்கு கொரோனா!

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 14**
**யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களைச் சேர்ந்த 26 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.** 19

## உடுவில், தெல்லிப்பழை பாடசாலைகளுக்கு பூட்டு

யாழ்ப்பாணம், டிசெ.14
வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலைகளும், உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளும் மறு அறிவித்தல்வரை மூடப்படுகின்றன என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் அறிவித்துள்ளார்.
மருதனார்மடம் சந்தை வியாபாரி ஒரு 19

## இந்திய மீனவர்களை அடித்து விரட்டுவோம்

### வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.14
வடமராட்சி வடக்கு மற்றும் கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்கள் இணைந்து அனைத்து மீனவர்களும் கடலில் இறங்கி இந்திய மீனவர்களுடன் கைகலப்பில் ஈடுபடுவதே இறுதித் தெரிவாக உள்ளது. இந்திய மீனவர்களை விரட்டி விரட்டி அடிப்போம். அவர்களின் 19

## தொற்று எண்ணிக்கையை மறைப்பது பெரும் குற்றம்!

### கொவிட் தடுப்பு செயலணியின் தலைவர் சவேந்திர சில்வா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.14
கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையைப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மறைப்பதும், தொற்றாளர்கள் தலைமறைவாகித் திரிவதும் குற்றமாகும். அதிகாரிகளும், தொற்றாளர்களும் அசமந்தப்போக்கில் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் முடி 19

முச்சந்தி முரளி



'அப்ப ஒரு நாள் லொக்டவுனில முழு கொரோனாவையும் ஒழிச்சிட்டினம் போல...'

## ஜெனிவா அமர்வு பெப். 22 ஆரம்பம்

கொழும்பு, டிசெ.14
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத்தொடர் 2021 பெப்ரவரி 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மார்ச் 19 ஆம் திகதிவரை நடைபெறும் குறித்த கூட்டத்தொடரில் 18

## தொற்றாளர்கள் எண்ணிக்கையை மறைக்க இடமளிக்கமாட்டோம்!

### சுகாதார அமைச்சர்

கொழும்பு, டிசெ.14
எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தொற்றாளர்களின் எண்ணிக்கையையும் உயி 19

## 39 பேருக்கு பி.சி.ஆர்.!

யாழ்ப்பாணம், டிசெ.14
திருநெல்வேலி பொதுச் சந்தை வியாபாரிகள், 19

## 398 பேர் குடும்பத்தோடு 2 வாரங்கள் சுயதனிமை!

யாழ்ப்பாணம், டிசெ.14
மருதனார்மடம் சந்தைப் பகுதியில் 398 பேரின் மாதிரிகள் நேற்றுமுன்தினம் பெறப்பட்டிருந்தன. இவர்கள் 19

### இந்திய மீனவர்களை எதிர்த்து

# முல்லை. மாவட்டச் செயலகம் முன்பாக மீனவர்கள் நாளை பெரும் போராட்டம்

முல்லைத்தீவு, டிசெ.14

**இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் நாளையதினம் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளனர்.**

அந்தப் போராட்டத்துக்கு மாவட்டத்தின் சகல பகுதிகளிலுமுள்ள, வர்த்தக சங்கங்கள், ஏனைய பொது அமைப்புக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனவும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

அண்மைக்காலமாக முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய கடற்றொழில் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இது தொடர்பாக இன்றைய தினத்துக்குள் உரிய தீர்வைப் பெற்றுத் தருவேன் என முல்லைத்தீவு மாவட்டச் செயலர் தெரிவித்திருந்தார்.

எனினும் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத்தருவது தொடர்பில், எமக்கு எவ்வித சாதகமான பதில்களும் உரியவர்களிடமிருந்து இதுவரை கிடைக்கவில்லை எனவே நாளை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்க திட்டமிடப்ப ட்டுள்ளது என்றனர்.

இதேவேளை மீனவர்களின் போராட்டதுக்கு முல்லைத்தீவு தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், கரைதுறைப்பற்று கூட்டுறவாளர் சங்கம், கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு வர்த்தக சங்கம், முல்லைத்தீவு மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் என்பன பூரண ஆதரவளிக்கின்றோம் எனத் தெரிவித்துள்ளனர். (ப246)

## வீதியை மறித்துப் போராட்டம்; 6 நபர்களுக்கு எதிராக வழக்கு

வவுனியா, டிசெ.14

வவுனியா பட்டானீச்சூர் பகுதியில் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்ட 6 நபர்களுக்கு எதிராக பல்வேறு குற்றசாட்டுக்களில் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் வவுனியா பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பட்டானிச்சூர் முஸ்லிம் மகாவித்தியாலய மைதானத்தின் முன்பாக கடந்த 5ஆம் திகதியன்று உயரழுத்த மின்சாரத் தூண்களை மின்சார சபை நிறுவ முற்பட்டதால் அப் பகுதியில் மின்சார சபைக்கு எதிராக் வவுனியா மன்னார் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் காரணமாக வவுனியா - மன்னார் பிரதான வீதி போக்குவரத்து 3 மணிநேரம் தடைப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த போராட்டத்தை மேற்கொண்ட முக்கிய 6 நபர்கள் மீது வவுனியா மாவட்ட நீதிமன்றில் அரச ஊழியரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியமை , பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தியமை , கோவிட் -19 விதிமுறைகளை மீறிச் செயற்பட்டமை போன்ற பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வவுனியா பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ப18)

## மாகாணசபை முறைமை வேண்டாம்! தேரர்கள் கூட்டாகப் போர்க்கொடி

கொழும்பு, டிசெ.14

இலங்கைக்கு மாகாண சபை முறைமை அவசியமில்லை. எனவே, அதற்கான தேர்தலை அரசாங்கம் நடத்தக் கூடாது. என்று பௌத்த தேரர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலின்போது கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆதரவாகப் பரப்புரைகளில் ஈடுபட்ட எல்லே குணவங்க தேரர், முருத்தெட்டுவே ஆனந்த தேரர், பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் ஆகியோரே இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்ததாவது;

அமைச்சு மற்றும் எம்.பி. பதவியை பெறமுடியாமல்போன சிலர், மாகாண சபையிலாவது தமக்குப் பதவி கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்புடன் உள்ளனர். ஆனால் இலங்கைக்கு மாகாணசபைகள் அவசியமில்லை என்பதே எமது நிலைப்பாடாகும் என்றார். அதே வேளை, " மாகாண சபைக்கு ஒதுக்கப்படும் மக்களின் பணத்தில் 80 வீதமானவை அரசியல்வாதிகளை நடத்துவதற்கான செலவீனங்களுக்கே பயன்படுத்தப்படுகின்றன. எனவே, மாகாணசபைகள் தேவையில்லை." என்று பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் வலியுறுத்தினார்.(ப44)

## தம்புள்ளையில் நேற்று நால்வருக்குத் தொற்று

கொழும்பு, டிசெ.14

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று நடத்தப்பட்ட பி சி ஆர் பரிசோதனையில் அங்கு வர்த்தக நிலையங்களில் பணியாற்றிய நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தம்புள்ளை நகர மேயர் ஜாலிய ஒபாதா தெரிவித்ததாவது;

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் உள்ள மூன்று வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் நால்வருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த சில நாள்களாக குறித்த பொருளாதார மத்திய நிலையத்தில் நடத்தப்பட்ட பி சி ஆர் பரிசோதனையில் இதுவரை 12 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றார். (ப)

## மூடப்பட்டது சாளம்பைக்குளம் பாடசாலை

வவுனியா, டிசெ.14

வவுனியா சாளம்பைக்குளம் அல் அக்ஷா முஸ்லிம் பாடசாலை சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைக்கமைய மூடப்பட்டுள்ளது.

வவுனியா புதிய சாளம்பைக்குளத்தைச் சேர்ந்த தாயும் பிள்ளையும் கடந்த சில நாள்களுக்கு முன்னர் வவுனியாவிருந்து கொழும்பு சென்று வந்த நிலையில் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி. ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு தாயுக்கும் பிள்ளைக்கும் கொவிட் 19 தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து புதிய சாலம்பைக்குளம் கிராமம் நேற்றுமுன்தினம் முதல் சுகாதாரப் பிரிவினரினால் முடக்கப்பட்டு அப்பகுதி மக்கள் அனைவரும் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைக்கமைய வவுனியா சாளம்பைக்குளம் அல் அக் ஷா முஸ்ஸிம் பாடசாலை எதிர்வரும் 16ஆம் திகதி வரைமூடப்பட்டுள்ளது. (ப18)

## மயங்கி வீழ்ந்த பெண் சிகிச்சை பலனின்றி சாவு

### வட்டுக்கோட்டையில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ.14

வீட்டில் மயங்கி வீழ்ந்த குடும்பப் பெண் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றிரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த பெண் அராலி தெற்கு வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த மதுசன் பிரபாசினி (வயது 29) என்ற இரண்டு பிள்ளைகளின் தாய் என பொலிஸார் தெரிவித்தனர்.

இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற் கொண்டார். சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. (26,25)

## கடையொன்றில் திடீர் தீ விபத்து



யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள ஐஸ்கிறீம் கடை ஒன்றில் நேற்று மாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள குறித்த கடையின் சமையல் அறையிலேயே தீ விபத்து ஏற்பட்டுள்ளது. சம்பவம் இடம்பெற்ற பகுதியில் யாழ்ப்பாண பொலஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்ததன் காரணமாக உடனடியாக மாநகர தீயணைப்புப் பிரிவினருக்கு அறிவித்ததை அடுத்து தீயணைப்புப் பிரிவினரால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

தீ விபத்துச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என வருவதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ப)

## விவசாயிகளுக்கு கலந்துரையாடல்

சாவகச்சேரி,டிசெ. 14

தென்மராட்சி தெற்கு தனங்கிளப்பு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தனங்களப்பு பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது,

கலந்துரையாடலில் காலபோக நெற் செய்கை வயல்களில் சிறுதானியப் பயிர்கள் விதைப்பு தொடர்பாகவும் அண்மையில் மழையால் ஏற்பட்ட அழிவு தொடர்பான பதிவுகளும் இடம்பெறுமென அமைப்பின் தலைவர் வே . பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ப-9)

## மாகாணசபைத் தேர்தல்; ஆளுங்கட்சிக்குள் எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.14

அரசமைப்பு மறுசீரமைப்புக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப் படக்கூடாது என்றும் அவ்வாறு நடத்துவது மக்கள் ஆணையை மீறும் செயலாகும் எனவும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பில் கவிந்து குமாரதுங்க மேலும் தெரிவித்ததாவது;

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம், 19ஆவது திருத்தச்சட்டம் மற்றும் தேர்தல் முறையில் உள்ள குறைப்பாடுகளை நிவர்த்திசெய்வதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் அவசியம், அவ்வாறு கிடைத்தால் நிவர்த்திசெய்யப்படும் என்ற அறிவித்தலை பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் விடுத்திருந்தார். மாகாணசபைகளாலும் சட்டம் இயற்றமுடியும். அப்படியானால் ஒரே நாடு, ஒரு சட்டம் என்ற கோட்பாட்டை நோக்கியும் பயணிக்கமுடியாதநிலை உருவாகும் . பயங்கரவாதத்தை ஆயுதமாக்கியே மாகாணசபைமுறைமை பெறப்பட்டது. அதிலுள்ள குறைப்பாடுகள் சீர்செய்யப்பட வேண்டும். அதற்கான அரசமைப்புத் திருத்தம் வரும்வரை மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்தக்கூடாது. அவ்வாறு நடத்தினால் அது மக்கள் வழங்கிய ஆணைக்கு முரணான செயலாக அமைந்துவிடும்." என்றார். (ப-44)

# அரசியல்கைதிகள் விடுதலைக்காக அனைவரும் ஓரணியில் நில்லுங்கள்

## முன்னாள் எம்.பி சரவணபவன் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 14

**தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பில் அரச கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதங்கள் இன்றி, குறுகிய கட்சி நலன்களைப் புறந்தள்ளி, தனித்தோடும் குறுக்குவழிகளை, தாங்கள் மட்டுமே தூய்மையானவர்கள், ஏனையோர்கள் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்கள் என்ற இறுமாப்பு எண்ணங்களைத் தவிர்த்து சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து நேர்மையாகத் தீவிரமாக ஈடுபட வேண்டும்.**



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:

அரச ஆதரவாளர்கள் அரசியல்வாதிகள் உட்பட தற்போது சிறைவாசம் அனுபவிக்கும் பலரை விடுவிக்கக் கோரி அரச தரப்பினரால் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களை விடுவிப்பதற்கு வழி தேடவேண்டிய நிலையில் ஜனாதிபதியும், பிரதமரும் இருக்கின்றார்கள். அவர் களைச் சட்டபூர்வமாக விடுவிக்க முடியாது என்பதும், எல்லோரையும் பொதுமன்னிப்பில் விடுவித்தால் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என்பதும் தெரிந்த விடயம்.

இப்போது, போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புட்ட 607 கைதிகளை புனர்வாழ்வுக்கு அனுப்புவது பற்றியும், சிறுகுற்றங்கள் செய்து சிறையிலுள்ள 8 ஆயிரம் கைதிகளை விடுவிப்ப தற்கும், தூக்குத் தண்டனைக் கைதிகளின் தண்டனையை, ஆயுள் தண்டனையாக மாற்றுவதற்கும் சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

இப்படி பலர் விடுவிக்கப்படும் போது, அரச ஆதரவாளர்கள், அரசியல்வாதிகள் இத்தகைய காரணங்களைக் காட்டி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படும் சாத்தியங்கள் உண்டு. அதற்காகச் சில அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்பது அரசின் தேவையாகவும் இருக்கலாம்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயம். எனினும் ஒரு சில அரசியல் கைதிகளை மட்டும் விடுவிப்பது என்ற நிலையுடன் அந்த முயற்சி நின்றுவிடக்கூடாது என்பதுதான் முக்கியமான விடயம். வழக்கு நிலுவையில் உள்ளவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்க முடியாது என்ற காரணங்களை அரசு கற்பித்து, பலரின் விடுதலை தட்டிக்கழிக்கப்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன. அதனால் சட்டமா அதிபர் வழக்குகளைத் திரும்பப்பெறுவதன் ஊடாக, அவர்களைப் பொதுமன்னிப்புக்கு உரியவர்களாக்க முடியும் என்ற விடயம் வலியுறுத்தப்பட வேண்டும். அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து இந்த விடயத்தில் நேர்மையாகவும், தீவிரமாகவும் ஈடுபட வேண்டும் என்றுள்ளது. (ம)

---

## ஓய்வூதியர்களுக்கு உயிர்வாழ் படிவங்கள்

பளை, டிசெ.14

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையினர் பிரதேச ஓய்வூதியர்களின் 2021 ஆம் ஆண்டுக்கான உயிர்வாழ் சான்றிதழ் விண்ணப்பப் படிவத்தை ஓய்வூதியர்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

படிவத்தைப் பூர்த்தி செய்து தமது பிரிவு கிராம அலுவலரிடம் 2021 மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்கவேண்டும் எனவும் இந்தத் திகதிக்கு முன்னர் கையளிக்கப்படாவிடின் 2021 மே மாத ஓய்வூதியம் வழங்கப் படமாட்டாது எனவும் அறிவித்துள்ளனர். (ற-9)

---

## தென்மராட்சி அதிபர் சங்கக் கூட்டம் 23 இல்

கொடிகாமம், டிசெ. 14

தென்மராட்சி அதிபர் சங்க பொதுக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம் பெறவுள்ளது. சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி அதிபர் சங்கத்தை வினைத்திறனுடன் செயற்படுத்துவதற்கு அனைத்துப் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் தரம் பெற்ற அதிபர்கள் இந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று சங்கத்தின் செயலாளர் லலிதா முகுந்தன் அறிவித்துள்ளார். (ற-159)

---

## எழுதுமட்டுவாழ் விவசாயிகளுக்கு நிவாரணப் பதிவு!

கொடிகாமம், டிசெ.14

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கான வெள்ள நிவாரணப் பதிவுகள் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளன. இந்தப்பதிவுகள் முற்பகல் 10 மணி முதல் 2 மணி வரை எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தை வளாகத்தில் இடம் பெறவுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்கள் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் மேட்டுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு பயிரழிவு ஏற்பட்டவர்களும் அன்றைய தினம் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பின் செயலாளர் இ. தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார். (ற-159)

---

## சித்திவீதத்தை அதிகரிப்பதற்கு குட்டியப்புலம் அ.த.கவில் குழு

யாழ்ப்பாணம், டிசெ.14

குட்டியப்புலம் அ.த.க பாடசாலையில் கல்வி அபிவிருத்திக்குழு நேற்றுமுன்தினம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய பின்தங்கிய பிரதேச பாடசாலைகளில் சித்தி வீதத்தை அதிகரிக்குமுகமாக இந்தக் கல்வி அபிவிருத்திக்குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

குட்டியப்புலம் அ.த.க பாடசாலை அதிபர் ப.பாஸ்கரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ் வில் யூ.எஸ் எயிட் நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட சுகவீன அறையும் திறந்துவைக்கப்பட்டது. (ற-இ)

---

## குவேற்றா மறைமாவட்டத்தின் ஆயர் ஞானப்பிரகாசம் ஆண்டகை மறைவு!

யாழ்ப்பாணம், டிசெ. 14



பாகிஸ்தானின் குவேற்றா மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி விக்ரர் ஞானப்பிரகாசம் அமதி ஆண்டகை பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் காலமானார். அமலமரித் தியாகிகள் சபையைச் சார்ந்த இவர், யாழ். மறைமாவட்டத்தில் அமைந்துள்ள பாஷையூர் பங்கை பிறப்பிடமாகக் கொண்டவர். (ம-இ)

---

## தொடர் மழையால் சீவல் தொழில் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.14

தொடர் மழையால் பனை தென்னை மரங்களில் கள்ளு உற்பத்திகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால்தான் சீவல் தொழிலும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது என பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வலிகாமம் கொத்தணியின் தலைவர் எஸ் .செல்வராசா தெரிவித்துள்ளார்.

கள்ளு தவறணைகளில் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற்கப்படுகின்றது. ஆனால் ஜனவரியின் பின்னரே பனை தென்னை மரங்களில் சீவல் தொழில் ஆரம்பிக்கப்படும்.

இதனால் சீவல் தொழில் செய்பவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. (வ-17)

---

## முல்லை. தனிமைப்படுத்தல் முகாம்களில் 427 பேர்!

முல்லைத்தீவு, டிசெ.14

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினரின் கண்காணிப்பில் உள்ள மூன்று தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையங்களில் 427 பேர் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

கேப்பாபிலவு விமானப்படைத்தள கண்காணிப்பு நிலையத்தில் 222 பேரும், கேப்பாபிலவில் உள்ள 59 ஆவது படைப்பிரிவின் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் 84 பேரும், புதுக்குடியிருப்பு திம்பிலிப் பகுதியில் அமைந்துள்ள 68 ஆவது படைப்பிரிவின் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் 121 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் மற்றும் தெற்கில் படையினரின் நிர்வாக செயற்பாடுகளில் கடமையாற்றியவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ற-19)

# நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தனியார்துறை பங்களிப்பு அவசியம்

*தொழில் முயற்சியாளர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு*

**கொழும்பு,டிசெ.14**

**சமூகத்தின் அனைத்து பிரிவுகளையும் பாதுகாக்கும் வகையில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டும். இதற்கு தனியார் துறையின் பங்களிப்பு மற்றும் புதிய அணுகு முறைகள் மிக முக்கியம் என ஜனாதிபதி கோத்தா பய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**



கடந்த வியாழக்கிழமை மாலை ஜனாதிபதி அலுவலகத்தில் தனியார்துறை தொழில் முயற்சியாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மேற்படி தெரிவித்தார்.

மேலும், சமூகத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் உயர் பொருளாதார சக்தியைப் பெற்றுக்கொடுப்பது முதன்மை தேவையாகும். எமது நாட்டின் மக்கள் தொகையில் 35 வீதமானோர் விவசாயிகள். விவசாயம் 70 வீதமான மக்களின் வாழ்வாதாரத்துடன் சம்பந்தப்பட்டுள்ளது. இந்தத் துறையின் உற்பத்தித்திறன் அதிகரிக்கப்பட வேண்டும். மேலும் இளைஞர்கள் அதில் ஈர்க்கப்பட வேண்டும்" என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இதேவேளை, தங்கள் வணிகத் துறைகளின் தற்போதைய நிலைமை குறித்து ஜனாதிபதிக்கு விளக்கமளித்த தனியார்துறையினர், தற்போது அவர்கள் எதிர்கொள்ளும் பயிற்றப்பட்ட மனித வளத்தின் பற்றாக்குறை, நிறுவன திறமையின்மை, கட்டுமானப் பொருள்களின் பற்றாக்குறை, சில தொழிலாளர்களின் அலட்சியம் மற்றும் புதிய சந்தைகளைக் கண்டு பிடிப்பதில் சிரமம் ஆகியவை உள்ளிட்ட பிரச்சினைகளை ஜனாதிபதியிடம் விவரித்தனர்.

இந்நிலையில், தொழில்முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து தீர்வுகளை வழங்குகிறேன் என ஜனாதிபதி தொழில் முயற்சியாளர் களிடம் தெரிவித்துள்ளார். (ந)



## மனிதத்தை மதிப்பதுதான் மனித உரிமைகள் தினம்

*அருட்பணி அ. ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவிப்பு*

மன்னார், டிசெ.14

மனிதத்தை மதித்து பண்பு நிறைந்த ஒரு சமுதாயத்தை இந்த உல்கத்தில் காண ஆசிக்கின்ற மனிதக் கூட்டமாக இந்த மனித உரிமைகள் தினம் இருக்கின்றது.

எமது அடிப்படை உரிமைகளைக் கேட்டு நிற்கின்ற இவ்வேளையில் நாம் இவ் மனித உரிமைகள் தினத்தை மிகவும் கரிசனையுடன் நினைவுகூர வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்று மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி அ.ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எல்லாவிதமான பாகுபாடுகளையும் தாண்டி உயிரையும் மனித இருப்பையும் கருத்தில் கொண்டு எங்கள் வாழ்க்கையில் பலவற்றை குடும்பமாக ஒற்றுமையாக சாதிக்கின்ற நிலைப்பாட்டை இந்த மனித உரிமைகள் தினம் உலகம் பூராகவும் கற்றுத் தருகின்றது.எம்மைப் பொறுத்தவரை எங்கள் நாடு, எங்கள் இனம், எங்கள் போராட்டம் எங்களுக்கான உரிமை, பயணம் என்பவற்றைப் பார்க்கின்றபோது ஒவ்வொரு இடத்துக்கும் வித்தியாசமாக இருக்கின்றது. நாம் எமது அடிப்படை உரிமைகளையே கேட்டு நிற்கின்றோம் என்றார். (ஜ-60)

## புலிகளின் போராட்டம் நியாயமானதே

*பேராசிரியர் பிரான்சிஸ் பொய்ல் தெரிவிப்பு*

அயர்லாந்து விடுதலை இயக்கத்தில் இருந்தவர் என்ற நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் உள்ள நியாயத்தன்மையை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது என பேராசிரியர் பிரான்சிஸ் பொய்ல் தெரிவித்துள்ளார்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் இளையோர் பிரிவான 'அலைகள்' ஒருங்கிணைத்திருந்த அனைத்துலக இனப்படுகொலையை தடுப்பதற்கும், தண்டிப்பதுக்குமான ஐ.நா பிரகடனத்தின் அனைத்துலக நாளை முன்னிட்டு இடம்பெற்ற இணையவழி கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செர்பனிக்கா இனப்படுகொலையில் 8 ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இதனை உலக நீதிமன்றம் இனப்படுகொலையென ஏற்றுக்கொண்டுள்ளது.

முள்ளிவாய்க்காலில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இனப்படுகொலை என்பது எண்ணிக்கையின் அடிப்படையிலானது அல்ல. அப் படுகொலைக்கான நோக்கம் இனப் படுகொலைக்கானது என்பதே முக்கியமானது. ஈழத்தமிழர்களுக்கு நடந்ததும் இனப்படுகொலைதான். இதற்கான நீதியை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம். தற்போது தமிழர்கள் புறக்கணிப்பு போராட்டத்தை நடத்த வேண்டும். எவ்வாறு இஸ்ரேலுக்கு எதிரான பலஸ்தீனியர்கள் எனும் புறக்கணிப்பு இயக்கம் நடத்தப்பட்டதோ அவ்வாறானதொரு இயக்கத்தை ஈழத்தமிழர்கள் உருவாக்க வேண்டும் எனத் தெரிவித்தார். பேராசிரியர் பொய்ல் 1995ஆம் ஆண்டு முதல் ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு குரல் கொடுத்து வருபவர். தமிழ்மக்கள் சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழ தனியரசுக்கு உரித்துடையவர்கள் எனத் தொடர்ந்தும் கூறி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## படைப்புழுவை எதிர்கொள்ள போதனாசிரியர்கள் தயார்!!

முல்லைத்தீவு, டிசெ.14

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இரண்டு மடங்காக சோளப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், படைப்புழுவின் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்று பிரதிமாகாண விவசாயப் பணிப்பாளர் பூ.உகநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சோளப் பயிர்ச் செய்கையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, விசுவமடு, மாங்குளம், ஒலுமடு, மதவாளசிங்கன் குளம் ஆகிய பிரதேசங்களில் சோளச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் படைப்புழுவின் தாக்கத்தை எதிர்கொண்டுள்ளனர். விவசாயத் திணைக்களம் படைப்புழுவின் தாக்கம் குறித்து தொடர்ச்சியாக கண்காணித்து வருகின்றது.

விவசாயப் போதனாசிரியர்கள் களத்துக்குச் சென்று பார்வையிட்டும் வருகின்றார்கள். அதுமட்டுமன்றி கட்டுப்பாட்டு முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டு வருகின்றன. விவசாய போதனாசிரியர்கள் ஊடாக சிபார்சு செய்யப்பட்ட கிருமிநாசினிகளை ஒரே நேரத்தில் பாவிப்பதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடியும். என்றார். (ற-19)

## யாழில் கேரிஎம் டியூக் மோ.சைக்கிள் திருட்டு


*ஒருவர் கைது*

கொடிகாமம், டிசெ.14

யாழ். நகரப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கேரிஎம் டியூக் மோட்டார் சைக்கிளைத் திருடிச்சென்றார் என்ற குற்றச்சாட்டில் நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 6 லட்சம் ரூபா பெறுமதியான கேரிஎம் டியூக் (செம்மஞ்சள் கலர்) மோட்டார் சைக்கிள் நேற்றுமுன்தினம் திருடப்பட்டது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. முறைப்பாட்டை அடுத்து யாழ் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி நிகால் பிரான்சிஸ் தலைமையிலான குழுவினர் நடவடிக்கையில் இறங்கினர். இதனை அடுத்தே குறித்த மோட்டார் சைக்கிளைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டார். திருடப்பட்ட மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டது. (ப159)

## பாலியல் குற்றவாளிகளின் படங்கள் பகிரங்கமாகும்



*அமைச்சர் சரத் வீரசேகர எச்சரிக்கை*

கொழும்பு, டிசெ.14

பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்களின் பெயர்கள், புகைப்படங்கள் பகிரங்கப்படுத்தப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர எச்சரித்துள்ளார். சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் குற்றங்களில் ஈடுபடுபவர்களை கண்டறிந்து கைதுசெய்த பின்னர், அவர்களின் புகைப்படங்கள் மற்றும் பெயர்கள் பகிரங்கப்படுத்தப்படும். குற்றங்களைச் செய்தவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். இதுபோன்ற நபர்கள் தொடர்பில் சமூகத்துக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அச்சமும் அவசியம்!

கொரோனாத் தொற்று நிலைமை கைமீறிப் போய்விட்ட நிலைமையே இப்போது நாட்டில் இருக்கின்றது. அரசும், அதிகாரிகளும் நாட்டில் சமூகப் பரவல் இல்லை என்று கூறிக்கொண்டிருந்தாலும், உண்மை நிலைமை அதற்கு எதிர்மாறுதான். தெற்கில் விஸ்வரூபம் எடுத்திருந்த கொரோனா வைரஸ், இப்போது வடக்கில் தன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்திருக்கின்றது.

யாழ்ப்பாணம், மருதனார்மடம் சந்தை வியாபாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் மேலும் பலருக்குத் தொற்றிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ஒரு ஆபத்தான நிலைமை. உழவர் சந்தை என்று சொல்லப்படும் மருதனார்மடம் சந்தைக்கு யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் இருந்து விவசாயிகள் வருகின்றனர். பொதுமக்களும் வருகின்றனர். அங்குள்ள வியாபாரிகளுக்கு கொரோனாத் தொற்று உள்ளநிலையில், இது ஒரு கொரோனா கொத்தணியாக மாறும் என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

இப்படியான சந்தர்ப்பத்தில் மக்களுக்கு சரியான தகவல்களை வழங்கி, அவர்களை முறையாக வழிநடத்த வேண்டியது அவசியமானது. பதவிகளில் இருக்கும் அதிகாரிகளின் கடமையும் கூட. ஆனால் வடக்கு மாகாணத்தில் அவ்வாறான ஒரு நிலைமை இல்லாதது துரதிர்ஷ்டவசமானது.

வடக்கில் நாளாந்தம் வெளியிடப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை முன்னுக்குப் பின் முரணாக உள்ளமை மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகின்றது. நேற்றுமுன்தினம் வடக்கில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை வடக்கு அதிகாரிகளின் குறைவாகவும், தேசிய கொரோனா ஒழிப்பு செயலணியின் அறிக்அகையில் அதிகமாகவும் இருந்தமை இதற்கு எடுத்துக்காட்டு.

அதிகளவான தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்படுகின்றமை; அறிவிக்கப்படுகின்றமை மக்கள் மத்தியில் பயத்தை பதற்றத்தை ஏற்படுத்தலாம் என்று வடக்கு அதிகாரிகள் எண்ணக்கூடும். அது ஒரு வகையில் சரியானதே. போர்க் காலத்தில் இழப்புக்களை அறிவிக்கும் போது இவ்வாறான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போதைய நிலைமை வேறு.

தொற்றாளர்கள் அதிகம் இனங்காணப்படுவது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் என்றபோதும், அதைத் தவிர்க்க முடியாது. அந்த அச்சமே மக்களை சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க உந்தும் என்பதே உண்மை. நிலைமையின் பாரதூரத்தை மக்கள் விளங்கிக்கொண்டால் மட்டுமே கொரோனாவின் பிடியில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியும்.

எங்கள் முன்னோர்கள் நல்ல விடயங்களை கடைப்பிடிக்கச் செய்ய அச்சத்தையே பயன்படுத்தினார்கள். சிறுவயதில் பேய் பிசாசுக் கதைகளைக் கூறி அச்சப்படுத்தி தீய விடயங்களைச் செய்யவிடாது தவிர்த்தனர். சில விடயங்களை அச்சத்தின் மூலமே சாதிக்க முடியும். கொரோனா விடயத்திலும் மக்கள் சுய கட்டுப்பாடு பேண, வைரஸ் பற்றிய அச்சம் அவர்களின் மனதில் இருப்பது அவசியம்.

கொரோனா பரவல் தீவிரம் கொண்டுள்ள நிலையில், அதுபற்றிய உண்மைத் தகவல்களை மக்களுக்கு அறியப்படுத்துவது அவசியமானது. அந்தப் பொறுப்புக்களில் உள்ளவர்கள் உண்மைகளை மறைக்காது உண்மைத் தகவல்களை வெளிப்படுத்துவது தேவையற்ற குழப்பங்களைத் தவிர்க்கும். மக்களும் நிலைமை உணர்ந்து செயற்பட வழிவகுக்கும்.

# கொரோனாத் தொற்று உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும்

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் வலியுறுத்துகின்றது

**கொழும்பு, டிசெ. 14**

**நாட்டில் கொரோனாத் தொற்று இப்போது சமூகத்தில் பரவியுள்ளது என்று இலங்கையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. சமூகத்தின் சில பகுதிகளில் இப்போது துணைக் கொத்துகள் உருவாகத் தொடங்கியுள்ளன என்றும் என்று சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் கொரோனாத் தொற்று சமூகப் பரவலாக இல்லை என்று மருத்துவ அதிகாரிகள் கூறினாலும், கொழும்பு வடக்கில் எழுந்த சிக்கலான சூழ்நிலைகளை நாங்கள் கவனித்துள்ளோம். அது இப்போது நாட்டின் பிற பகுதிகளுக்கும் பரவி வருகிறது.

வழக்கம்போல காலி, குருநாகல் மற்றும் கம்பஹாவிலிருந்து தொற்றாளர்கள் கண்டறியப்படுகின்றனர்.

ஆகவே, கொத்துக்களுடன் எந்தத் தொடர்பும் இல்லாமல் நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர். உண்மையான ஆபத்தை பொது மக்களுக்கு தெரிவிக்குமாறு மருத்துவ நிபுணர்களை வலியுறுத்துகின்றோம்.

14 நாள்கள் தனிமைப்படுத்தல் காலத்தை மூன்று முறை முடித்த ஒருவர், கொரோனா காரணமாக உயிரிழந்துள்ளார். அந்த நபர் பாலாபிட்டியவில் வசிப்பவர்.

வீட்டுத் தனிமைப்படுத்தலில் இருந்த அவர் பின்னர் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தமை பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதிசெய்யப்பட்டது. அதன் பின்னர் அவர் ஒரு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பப்பட்டார். மேலும் 14 நாள்கள் அங்கு கண்காணிக்கப்பட்ட பின்னர் மீண்டும் 14 நாள்கள் வீட்டு தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டிருந்தார். அதன்பின்னர் வேலைக்கு திரும்பிய அவர் வேலைத்தளத்தில் உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டது. அதன்பின்னர் அவருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில்கொரோனா உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது, என்றார். (ஒ.இ)

## மாகாணசபைத் தேர்தல் முன்மொழிவு அமைச்சரவைக்கு

கொழும்பு, டிசெ. 14

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கான முன்மொழிவு, அமைச்சரவை ஒப்புதலுக்காக நாளை முன்வைக்கப்படும் என்று மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்தி, அதற்கான சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச, தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் கடந்த வெள்ளிக்கிழமை கேட்டிருந்தார்.

பழைய அல்லது புதிய முறைக்கு அமைவாக தேர்தலை நடத்துவதற்கான சந்தர்ப்பம் குறித்து ஆராயுமாறும் பிரதமர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் குறிப்பிட்டிருந்தார். (ஒ.இ)

## 504 இலங்கையர்கள் நாடு திரும்பினார்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 14

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பல்வேறு நாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 504 இலங்கையர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நாடு திரும்பியுள்ளனர். அதன்படி டுபாயிலிருந்து 144 பேரும் மாலைதீவிலிருந்து 31 பேரும் கட்டாரிலிருந்து 51 பேரும் ஆஸ்திரேலியாவிலிருந்து 75 பேரும் ஜப்பானிலிருந்து 203 பேரும் நேற்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (ம-இ)

# வங்குரோத்து நிலைக்கு நல்லாட்சியே காரணம்

### இராஜாங்க அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 14

“கடந்த நல்லாட்சிக் காலத்தில் சிறந்த முகாமைத்துவம் இல்லாததன் காரணத்தால் முழு நாடும் வங்குரோத்து நிலைக்கு உள்ளானது என்று கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

தற்போதைய அரசின் கீழ் நாடு ஒருபோதும் வங்குரோத்து நிலையை அடையாது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பலமான தலைமையின் கீழ் நாடு விரைவான அபிவிருத்தியை நோக்கி நகரும் என்றும் உறுதியளித்தார். இந்த நாட்டில் கட்டட நிர்மாணத் தொழில் மற்றும் வியாபார சமூகத்தினர் தற்போதைய அரசின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் குறித்து எதிர்க்கட்சிகள் என்ன குற்றச்சாட்டுக்களை முன்வைத்தாலும், வரவு செலவுத் திட்டம் அனைத்துத் துறைகளுக்கும் நிவாரணம் அளிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (து-22)

# 10 வீதமானோருக்கே கொரோனா தடுப்பூசி

## உலக சுகாதார ஸ்தாபனம் தகவல்

கொழும்பு, டிசெ. 14




இலங்கையின் சனத்தொகையில் 10 வீதமானவர்களுக்கு கொரோனாத் தொற்று ஒழிப்புக்கான தடுப்பூசியை வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

மத்திய மற்றும் குறைந்த வருமானம் பெறும் நாடுகளுக்கு ஒரு பில்லியன் தடுப்பூசிகளை வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ், சுகாதார ஸ்தாபனத்தால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்துக்குத் தயாராகுமாறு உலக சுகாதார ஸ்தாபனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டார்.

தடுப்பூசி வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ள போதிலும், இலங்கைக்கு எப்போது அவை விநியோகிக்கப்படும் என எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், கொரோனா ஒழிப்புக்கான தடுப்பூசி கிடைக்கப்பெற்றவுடன் அதனைப் பயன்படுத்துவதாயின் அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் தயார் நிலையில் காணப்படல் வேண்டும் என்று தெரிவித்தார். (த-இ)

# ரயில் சேவைத் திணைக்களத்தில் 8 ஆயிரம் வெற்றிடங்கள் உள்ளன

## கொரோனா ஒழிப்பு சுகாதார நடவடிக்கைக்கும் ஆளணியினர் இல்லை என்று சங்கம் விசனம்

கொழும்பு, டிசெ. 14

**புகையிரத திணைக்கள சேவையில் 8 ஆயிரம் தொழில் வெற்றிடங்கள் நிலவுகின்றன. அவற்றில் புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சேவையில் மாத்திரம் 366 வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சங்க செயலாளர் கசுன் சாமர சுட்டிக்காட்டியுள்ளார்.**

புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: புகையிரத சேவையில் காணப்படும் குறைபாடுகளுக்குத் தீர்வுகாண புகையிரத திணைக்களம் உரிய நடவடிக்கைகளை இதுவரை முன்னெடுக்கவில்லை. புகையிரத திணைக்களத்தில் தற்போது 23 ஆயிரம் பேர் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

இருப்பினும் 8 ஆயிரம் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இளையோர் தொழில் வாய்ப்புக்கள் இல்லாமல் போராட்டங்களை முன்னெடுக்கிறார்கள். படித்த இளையோரை புகையிரத சேவையில் இணைத்துக்கொள்ள உரிய நடவடிக்கைகளை புகையிரத திணைக்களம் இதுவரை எடுக்கவில்லை. புகையிரத திணைக்களத்தில் 9 சேவை பிரிவுகள் காணப்படுகின்றன. புகையிரத உப போக்குவரத்து திணைக்கள சேவையில் 3 ஆயிரம் வெற்றிடங்களும், புகையிரத நிலைய தூய்மைப்படுத்தல் சேவை பிரிவில் 320 வெற்றிடங்களும், புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சேவையில் 366 வெற்றிடங்களும் நிலவுகின்றன. இவ்வாறாக புகையிரத சேவை வழங்கும் பிரிவுகளிலும் வெற்றிடங்கள் உள்ளன.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ள சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை புகையிரத சேவையில் முழுமையாக செயற்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. குறைவான சேவையாளர்களைக் கொண்டு புகையிரத சேவையை வினைத்திறனாக முன்னெடுக்க பல தடைகள் காணப்படுகின்றன. புகையிரத சேவையில் படித்த இளைஞர்களை விரைவில் இணைத்துக்கொள்ள புகையிரத திணைக்களம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். என்று கோரியுள்ளார். (த-இ)

# 2019 உ/த மாணவர்களின் மனு புதனன்று பரிசீலனை

கொழும்பு, டிசெ. 14

2019 உயர் தர பெறுபேறுகளின்படி பல்கலைக்கழகங்களில் பொறியியல் மற்றும் இயற்பியல் பாடங்களுக்காக மாணவர்களை உள்வாங்குவதை இடைநிறுத்த, இடைக்கால தடை உத்தரவு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவை மேலும் பரிசீலிப்பதற்காக நாளை மறுதினம் 16 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புவனக அலுவிஹார, எஸ்.துரைராஜா மற்றும் யசந்த் கோதாகொட ஆகிய மூன்று பேர் கொண்ட நீதிபதிகள் தலைமையிலான குழாம் முன்னிலையில் இந்த மனு கடந்த வெள்ளிக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டின் உயர் தர பரீட்சைக்கு புதிய பாடத்திட்டத்தின் கீழ் தோற்றி சித்தியடைந்த மாணவர்கள் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

புதிய பாடத்திட்டத்துக்கும் பழைய பாடத்திட்டத்துக்கும் மதிப்பெண்களுக்கு இடையே பெரியளவில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதனால் தமக்கு பெரிய அநீதி இடம்பெற்றுள்ளது என்றும் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்றும் தெரிவித்து இரண்டு பாடத்திட்டங்களுக்கும் சமனான அல்லது நியாயமான 'இசற்' மதிப்பெண்களை வழங்கும்படி உத்தரவு பிறப்பிக்குமாறு மனு தாரர்கள் மனுவில் கோரப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர், அமைச்சின் செயலாளர், பரீட்சை ஆணையாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அதன் தலைவர் அத்துடன் சட்டமா அதிபர் ஆகியோரை மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளனர். (த-இ)

# பல சமூகம் என்ற ரீதியிலேயே ஜனாதிபதியின் ஆட்சி உள்ளது

## கூறுகின்றார் மஸ்தான் எம்.பி.

கொழும்பு, டிசெ. 14

பல சமூகம் வாழும் நாடு என்ற அடிப்படையில் ஜனாதிபதி தலைமையிலான ஆட்சி முன்னெடுக்கப்படுகின்றது என்று மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் இளைஞர் மற்றும் மகளிர் மாநாடு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னி மாவட்டத்தில் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி பெரு வளர்ச்சியை அடைவதற்கு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் எமது கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச ஆகியோரின் கடந்த கால செயற்பாடுகளே காரணம். அதனை இங்கு கட்டி வளர்த்ததில் இளைஞர், யுவதிகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் பங்கும் அளப்பரியது.

சில சமூகம் பாதிக்கப்படக்கூடிய முடிவுகளை சுகாதாரத் துறை எடுத்திருக்கின்றது. அது தொடர்பில் ஆராய சில குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அது தொடர்பில் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். எல்லா சமூகங்களுக்கும் எல்லா இடத்திலும் பிரச்சினை இருக்கிறது. எந்தக் கட்சி வந்தாலும் அந்த பிரச்சினை இருக்கும். ஏனெனில், இது பல சமூகம் வாழும் நாடு.

கடந்த காலத்தில் எவ்வாறான குற்றச்சாட்டுக்களை வைத்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். பெரும்பான்மை சமூகத்தை விட சிறுபான்மை சமூத்தின் வாக்கு எமக்கு வன்னியில் அதிகமாகக் கிடைத்துள்ளது. வரும் தேர்தல்களிலும் நாம் ஒன்றுபட்டு எமது பிரதேச அபிவிருத்தியை தெரிவுசெய்ய வேண்டும்.

குளம், வீதி, விவசாயம் என பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும், எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும், மக்களின் வறுமையைக் குறைப்பதற்காகவும் சரியான வேலைத்திட்டங்களை இனங்கண்டு அதனை சரியான முறையில் நடைமுறைப்படுத்த பெரும் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. என்றார்.

இதேவேளை, கட்சியின் முன்னேற்றத்துக்காக மாவட்ட மட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் மாநாட்டில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், அமைச்சர் நாமல் ராஜபக்ஸவின் வன்னி இணைப்பாளர் பாலிந்த, முன்னாள் பிரதி அமைச்சர் சுமதிபால, பொதுஜன பெரமுன கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் மாவட்ட மட்ட முக்கியஸ்தர்கள், மதத் தலைவர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (த-110,18)

# இன்று திறக்கப்படுகின்றது பேலியகொட மெனிங்சந்தை

கொழும்பு, டிசெ. 14

பேலியகொட புதிய மெனிங் சந்தை மொத்த வர்த்தகத்துக்காக இன்று திங்கட்கிழமை திறக்கப்படுகின்றது.

அதன்படி இன்று பிற்பகல் 4 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரை அங்கு வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன என்று மெனிங் பொதுச் சங்கத்தின் தலைவர் லால் ஹெட்டிகே தெரிவித்தார்.

நெரிசல் இல்லாமல் வர்த்தகத்தை முன்னெடுப்பதற்காக மொத்த விற்பனையாளர்கள் மட்டுமே தங்கள் விவசாய விளைபொருள்களை அந்தநாளில் கொண்டுவருமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

மொத்தமாக அனுப்ப வேண்டாம் என்றும் சாதாரண அளவை அனுப்புமாறும் அனைத்து விவசாயிகளிடமும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமக்கு அண்மையில் மீன் சந்தை உள்ளதால் குறித்த மொத்த வியாபார நடவடிக்கைகளை மாலை நேரத்தில் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)

# மாகாண சபைத் தேர்தலிலும் பெரமுன வெற்றி தொடரும்!

## இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.14**

**மாகாண சபைத் தேர்தலை 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பழைய முறைமையிலாவது நடத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அந்தத் தேர்தலிலும் பொதுஜன பெரமுன நாடளாவிய ரீதியில் வெற்றி பெறும் என சுய கைத்தொழில் விருத்தி மனைப்பொருளாதார மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பிரபல அரசியல் கட்சியாக வளர்ச்சி பெற்றுள்ளது. 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்றுள்ளது. 2021 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தலை உரிய காலத்தில் நடத்த முடியாமல் போனதற்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும். மாகாண சபைத் தேர்தலை 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பழைய முறையிலாவது நடத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றார். (ப)

## நாடாளுமன்ற உணவால் எம்.பிக்களுக்கு அதிருப்தி

கொழும்பு, டிசெ.14

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அண்மையில் கிடைத்த உணவு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

நாடாளுமன்றம் இடம்பெறும் தினங்களில் மாலை 5 மணியளவில் வழங்கப்படும் தேனீர் நேரம் அன்றைய தினம் 6 மணி வரை தாமதப்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் பாணுடன் ரின் மீன் சம்பல் வழங்கப்பட்டதால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் மீன் உட்கொள்ளாதவர்களாகக் காணப்படுவதால், அவர்களுக்கு பாண் மாத்திரம் உண்ண நேரிட்டுள்ளது. நாடாளுமன்றக் கூட்டம் இரவு 8 மணியாகும் வரை இடம்பெறும். எனினும் பாண் வழங்கப்பட்ட தினம் இரவு 9 மணி வரை நாடாளுமன்றக் கூட்டம் இடம்பெற்றுள்ளது. இதனால் நாடாளுமன்ற ஊழியர்கள் 11 மணிவரை பசியோடு இருந்தனர் எனத் தெரிவிக்கப்படுன்றது. நாள் ஒன்றுக்கு லட்சக்கணக்கான பணத்தை வீணடிக்கும் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் அவர்கள் வருத்தமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

## வருடாந்த குத்தகை அறவிட நடவடிக்கை

அராலி, டிசெ.14

அராலி மத்தி ஊரத்தி சங்கானையில் பிரதேசசபையின் உறுதிக் காணியில் உள்ளவர்களுக்கு வருடாந்த குத்தகை 2021 இல் இருந்து அறவீடு செய்யப்படவுள்ளது.

2015 இல் வலி.மேற்கு சபையின் தவிசாளராக இருந்த திருமதி ஐ.நாகரஞ்சினி காலத்தில் சபையின் கோரிக்கைக்கு இணங்க அராலி மற்றும் சங்கானையில் உள்ள 78 குடும்பங்களுக்கு பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில் சபையின் காணி பகிர்ந்து அளிக்கப்பட்டு உறுதி வழங்கப்பட்டது.


இவ்வாறு சபையின் உறுதிக் காணியில் உள்ளவர்களுக்கு வருடாந்த குத்தகை அறவிட சபை உறுப்பினர்கள் ஒன்றிணைந்த அடிப்படையில் தமது எண்ணக்கரு விவரங்களை சபையின் தவிசாளர் த.நடனேந்திரனின் அவசர கவனத்துக்கு கொண்டுவந்துள்ளனர். இதனையடுத்து சபையின் தவிசாளர் த. நடனேந்திரன் சாதாரண சபைக் கூட்டத்தில் ஒன்றிணைந்து தீர்மானித்து ஒரு கட்டணத்தை வருடாந்த குத்தகையாக அறவிடத் தீர்மானித்துள்ளார். (ஐ-50)

## வீதியை மூடி 2 அடி வெள்ளம் பயணிப்பதில் மக்கள் சிரமம்

### இந்திராபுரத்தில் இந்த நிலை

பளை, டிசெ.14

பளை இந்திராபுரம் பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் அந்த வீதியைப் பயன்படுத்தும் ஐம்பதுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வேறு வீதிகள் ஊடாகப் பயணிக்கின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறித்த பகுதி மக்கள் கடந்த 20 வருடங்களாக இடம்பெயர்ந்திருந்தனர். அவர்கள் மீள்குடியேற்றப்பட்ட பின்னர் அங்குள்ள குளம் தூர்வார ப்பட்டது. அண்மையில் பெய்த பெரு மழையால் குளம் நிறைந்து அருகில் உள்ள வீதியை மூடியுள்ளது என்றும், சுமார் இரண்டடி வெள்ளம் அந்த வீதியில் தேங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் கிராமத்தின் பின்பகுதியில் உள்ள ஐம்பதுக்கு மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-9)



## நெசவுத் தொழிற்சாலை தொடர்பில் ஆராய்வு

கிளிநொச்சி, டிசெ.14

கிளிநொச்சி-தருமபுரத்தில் உள்ள நெசவுத் தொழிற்சாலைக்குச் சென்ற கிளிநொச்சி மாவட்டச் செயலர், அங்குள்ள நிலமைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

கிளிநொச்சி-கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் வடமாகாண தொழில்துறை திணைக்களத்தின் கீழ் இயங்கி வருகின்றது நெசவுத் தொழிற்சாலை. அந்தத் தொழிற்சாலையை கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

நெசவு தொழிற்சாலையில் உள்ள குறைகளைக் கேட்டறிந்ததுடன் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் நெசவுத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற பெட்சீட், சாரி உள்ளிட்ட உற்பத்திகள் தரமான முறையில் இடம்பெறுகின்றனவா? மற்றும் அவற்றுக்கான சந்தை வாய்ப்பு நிலைமைகள் தொடர்பிலும் அவர் கவனம் செலுத்தினார். (ஐ-214)

## குழந்தையை எதிர்பார்க்கும் பெண்களுக்கு பரிசோதனை

சாவகச்சேரி, டிசெ.14

வரணி தெற்கு கலைவாணி தாய்மார் கழகத்தின் ஏற்பாட்டில் அந்தப் பிரதேசத்தில் குழந்தையை எதிர்பார்த்திருக்கும் பெண்களுக்கு போசாக்கு நிறை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் பரிசோதனை 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட 25 பெண்களுக்கு நடத்தப்பட்டன.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் மற்றும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை அலுவலர்களின் பங்களிப்புடன் குருதி மற்றும் சிறுநீர்ப்பை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (ஐ-9)

## மிதிவெடி அகற்றலுக்கு 3 மில்லியன் யூரோக்கள்

கொழும்பு, டிசெ.14

இலங்கையில் மிதிவெடி அகற்றலுக்கான நிதியை ஜேர்மனி அதிகரித்துள்ளது என்று கொழும்பில் உள்ள ஜேர்மன் தூதரகம் தெரிவித்துள்ளது.

2019 ஆம் ஆண்டில், ஜேர்மனிய வெளியுறவு அலுவலகம் இலங்கையில் வடக்கு மாகாணத்தில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மிதிவெடி அச்சத்தைக் குறைப்பதற்காக ஹாலோ அறக்கட்டளைக்கு 2 மில்லியன் யூரோக்களை வழங்கியது.

இந்த நிலையில் கடந்த ஆண்டு வழங்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாக, ஜேர்மனி இப்போது அதிகமாக ஒரு மில்லியன் யூரோக்களை இந்த திட்டத்துக்கு வழங்கியுள்ளது.

ஒட்டாவா உடன்படிக்கையின் படி 2020 ஆம் ஆண்டளவில் மிதிவெடிப் பாதிப்பு இல்லாத நாடாக மாறும் இலக்கை அடைய இலங்கைக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த உதவி வழங்கப்பட்டது. (ற-இ)

## நகரசபை தொழிலாளருக்கு விடுதிகள் அமைக்க முடிவு!

சாவகச்சேரி , டிசெ.14

சாவகச்சேரி நகர சபையால் இந்த வருட பாதீட்டில் செலவழிக்கப்படாமல் உள்ள நிதியில் நகரசபையின் தொழிலாளர்களுக்கு இரு விடுதி அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நகரசபையால் ஏற்கனவே 12 விடுதிகள் அமைத்து 24 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன. போர்க் காலத்தில் அவை முற்றாக அழிக்கப்பட்டன. மீள்குடியமர்வின் பின்னர் தொழிலாளர்கள் அப் பகுதியில் குடியிருப்புகளை அமைத்து வசித்து வருகின்றனர்.

நகரசபையின் கடந்த ஆட்சியாளர்கள் தனித்தனியாக ஐந்து வதிவிடங்கள் அமைத்து தொழிலாளர்களுக்கு வழங்கியிருந்தனர். அதனைத் தொடர்ந்து தற்போதைய ஆட்சியில் உள்ளவர்களும். எதிரணியினரும் சுத்திகரிப்பு தொழிலாளர்களின் நலன்களில் மிகவும் அக்கறை கொண்டு மேலும் இரு விடுதிகளை அமைக்க நகரசபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ் வருட பாதீட்டில் தொழிலாளர் விடுதி அமைக்க நிதி ஒதுக்கப்படாததால் செலவழிக்கப்படாமல் ஒதுக்கமாக உள்ள நிதியில் இரண்டு விடுதிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்வதென தவிசாளர் தெரிவித்துள்ளார். (ஐ-9)

## சமாதான நீதிவானாக சத்திய பிரமாணம்

சாவகச்சேரி,டிசெ.14

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செல்லத்துரை பேரின்பநாதன் சமாதான நீதிவானாக அண்மையில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (ஐ- 9)


## வீதித் திருத்தப் பணியில் மாற்றம் செய்ய முடிவு

சாவகச்சேரி, டிசெ.14

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட மண்டுவில் வட்டாரத்தில் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த மண்டுவில் அம்மன் கோவில் வீதி (சோலையம்மன் கோவில் வீதி) திருத்த வேலை நிறுத்தப்பட்டு மீசாலை வயற்கரை அம்மன் வீதிக்கு (முதலியாவெளிவீதி) மாற்றப்பட்டுள்ளது என்று பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டச் செயலகத்தால் நிறைவான கிராமம் (சப்ரிகம) வேலைத் திட்டத்தில் சேமிப்பு நிதியாகக் கிடைத்த 19.5 மில்லியன் ரூபா நிதியில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் சப்பச்சிமாவடி வீதி, மகளிர் கல்லூரி முதலாம் ஒழுங்கை மற்றும் மண்டுவில் அம்மன் கோவில் வீதி ஆகியவை 4.5 மில்லியன் ரூபா செலவிலும் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் இரு மிகுதி வீதி வேலைகளும், பத்து சீரமைப்புவேலைகள் மேற்கொள்ள 15 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த மூன்று வீதிகளில் ஒன்று தற்போது மாற்றப்பட்டுள்ளது. (ப-9)

# வீதி விளக்குகள் ஒளிராததால் பொதுமக்கள் பெரும் சிரமம்!



**சாவகச்சேரி, டிசெ. 14**

**சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்டபகுதிகளில் பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ்கள் பழுதடைந்து திருத்தப்படாமல் உள்ளதால் இரவு வேளைகளில் பயணிப்பதில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொருத்தபட்டிருந்த மின்குமிழ்கள் பழுதடைந்து திருத்தப்படாமல் உள்ளதால் அந்தப் பகுதி இருள் சூழ்ந்ததாகக் காணப்படுகிறது. இதைப் பயன்படுத்தி பல குடியிருப்புகளில் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. அத்தோடு விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் சாவகச்சேரி நகரசபையில் அதன் உறுப்பினரும் அண்மையில் கேள்வியெழுப்பினார். பதிலளித்த தவிசாளர் மின்குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இலங்கை மின்சார சபையுடன் தொடர்புகொண்டு வருகிறோம். அவர்கள் இன்னமும் வந்து பொருத்தவில்லை. இது தொடர்பாக மாகாண உள்ளூராட்சி திணைக்களம் மற்றும் பிராந்திய உதவி உள்ளூராட்சி திணைக்களம் போன்றவற்றுடன் தொடர்புகொண்டுள்ளோம் -என்றார். (ஐ-9)



## வவுனியா சிவபுரம் கிராமத்தில் தேசிய வீட்டுத்தோட்டச் செய்கை

வவுனியா,டிசெ.14

வவுனியா-செக்கட்டிப்புலவு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட சிவபுரம் கிராமத்தில் தேசிய வீட்டுத் தோட்டச் செயற்றிட்டத்தின் கீழ் கன்றுகள் மற்றும் விதைகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

செக்கட்டிப்புலவு கிராம அலுவலர் சு.கிருசிகா தலைமையில் வீட்டுத்தோட்டம் மூலம் பயனடைந்த பயனாளி ஒருவரின் வீட்டில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு நடைபெற்றது.

வீட்டுப் பொருளாதாரம் , போசனையை மேம்படுத்தும் வீட்டுத் தோட்ட செயற்றிட்டத்தின் கீழ் சிவபுரம் , ஹிஜ்ராபுரம், புதிய கோவில்குளம் மற்றும் செல்வாநகர் ஆகிய கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு புடோல், புசிட்டா, பாகல், கீரை போன்ற விதைகளும், கத்தரி, தக்காளி , மிளகாய் போன்ற கன்றுகளும் வழங்கப்பட்டன. (ஐ-18)

## சேதனப் பசளை உற்பத்தி நிலையம் வடமராட்சியில்

*விரைவில் திறக்க ஏற்பாடு*

யாழ்ப்பாணம், டிசெ.14

வடமராட்சி தெற்கு மற்றும் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட முள்ளிப் பகுதியில் அமைக்கப்படும் திண்மக்கழிவுகளை சேதனப் பசளையாக மாற்றுவதற்கான செயற்றிட்ட உற்பத்தி நிலையம் விரைவில் செயற்படவுள்ளது.


இந்த நிலையத்துக்கு பருத்தித்துறை நகர சபை பருத்தித்துறை பிரதேச சபை. வல்வெட்டித்துறை நகர சபை, சாவகச்சேரி நகரசபை சாவகச்சேரி பிரதேச சபை, வலி கிழக்கு பிரதேச சபை. வலி தெற்கு பிரதேச சபை, வலி வடக்கு பிரதேச சபை உள்ளிட்ட எட்டு உள்ளூராட்சி சபைகளில் தினமும் சேரும் உக்கக்கூடிய கழிவுகள் வழங்கப்பட்டு அவை பசளையாக்கி விற்பனை செய்யப்படவுள்ளன.

விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் குறித்து சபை களால் வழங்கப்படும் திண்மக் கழிவுகளின் தொகைக்கேற்ப பகிர்ந்தளிக்கப்படும்.

இது தொடர்பாக குறித்துத உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர் மற்றும் செயலாளர்களுடனான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை வடமராட்சி தெற்கு. மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-9)

## அட்டலுகம பிரதேசத்தில் 547 பேருக்கு கொரோனா

பண்டாரகம மெதகம நிர்வாக சுகாதாரப் பரிசோதகர் தெரிவிப்பு



பண்டாரகம, டிசெ.14

பண்டாரகம அட்டலுகம பிரதேசத்தில் வாழும் 20 ஆயிரம் பேரில், மூன்றில் இரண்டு பேர் வரையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று பண்டாரகம மெதகம நிர்வாக சுகாதாரப் பரிசோதகர் எஸ்.யூ.மதுஹான் தெரிவித்துள்ளார்.

இது தற்போது மேற்கொள்ளப்படுகின்ற பி.சி.ஆர் பரிசோதனைகளின் மூலம் உறுதியாகியுள்ளது எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

அந்த பிரதேசத்தில் வாழும் 20 ஆயிரம் பேரில் ஆயிரத்து 541 பேருக்கு மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 547 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதற்கமைய அந்தப் பிரதேசத்தில் இதுவரை 18 ஆயிரத்து 459 பேர் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளனர். இதற்காக கடுமையாக போராட வேண்டியுள்ளது. கடந்த 10 ஆம் திகதி அட்டலுகம பிரதேசத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்காக 400 பேர் அழைக்கப்பட்டிருந்த நிலையில் 50 பேர் மாத்திரமே பி.சி.ஆர். பரிசோதனை செய்தனர்.

கடந்த 2 ஆம் திகதி தொற்றுக்குள்ளான நபர்களை அழைத்துச் செல்வதற்காக சென்ற சுகாதாரப் பரிசோதகர்கள் மீது தொற்றுக்குள்ளானவர்கள் எச்சில் துப்பியுள்ளனர்.

இதனால் களுத்துறை மாவட்டம் கடும் அவதானமிக்க வலயமாக மாறும் எனவும் மெதகம நிர்வாக சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். (ம-இ)

## பொதுப் போக்குவரத்தின்போது சுகாதார நடைமுறை அவசியம்

*தென்மராட்சி சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்து*

சாவகச்சேரி, டிசெ.14

**தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனாத் தொற்று ஏற்படாதிருக்க பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் மக்கள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அறிவித்துள்ளனர்.**

தற்போது பொதுப்போக்குவரத்து வாகனங்களில் பயணிப்போர் சமூக இடைவெளி பேணாதும், முகக்கவசம் அணியாமல் பயணிப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயற் பாடுகளால் பிரதேசத்தில் கொரோனாத் தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனால் வாகனங்களில் பயணிப்போர் கூடிய அளவு சமூக இடைவெளிகளைப் பேணுவதுடன் முகக்கவசம் அணிவது அவசியமாகிறது. தூர இடங்களுக்குச் சென்று வருவோர் தமது பிரிவு கிராம அலுவலருக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கத் தவறுவோர் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் தனிமைப்படுத்த நேரிடும் என்றனர். (ப-9)

# சனிப்பெயர்ச்சி பலன்கள்!



ராசி மண்டலத்தில் வலம் வரும்போது, சந்திரன் இருக்கும் ராசியிலிருந்து பன்னிரண்டிலும், சந்திரன் இருக்கும் ராசியிலும், அடுத்து சந்திரனில் இருந்து 2ஆவது ராசியிலும் இரண்டரை வருடங்கள் தங்கியிருந்து, பயணிப்பார் சனி.

ஏழரைச் சனி என்றதும் பயம்கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜென்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர். நம்மை வளர்த்து, நமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, இன்ப,துன்பங்களை வினைப்படி செயல்படுத்தி, வாழவைப்பவர்.

நிகழும் சார்வரி வருடம் மார்கழி 11ஆம் நாள் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை இரவு 4:49 மணிக்கு (விடிந்தால் 27.12.2020) உத்திராடம் நட்சத்திரம் 2ம் பாதம் மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார் (வாக்கியப் பஞ்சாங்கப்படி). இந்தப் பெயர்ச்சியில் பன்னிரு ராசிகளுக்கும் அவர் அருளப்போகும் பலாபலன்கள் இங்கே தரப்படுகின்றன.



## தனுசு

மற்றவரை மதித்துப் போற்றும் பண்பாளர் நீங்கள். சனி பகவான் 27.12.2020 முதல் 19.12.2023 வரை ஜென்மச் சனியாக அமர்கிறார். 'ஜென்மச் சனி' என்று கலக்கம் வேண்டாம்.

உங்களின் ராசிநாதனான சனிபகவான் உங்கள் ராசிக்குள்ளேயே ஆட்சிப் பெற்று அமர்வதால், அனைத்து வசதிகளையும் அள்ளித்தருவார். பண வரவையும் அதிகரிப்பார். இனி வெளிச்சத்துக்கு வருவீர்கள்; நிம்மதி பிறக்கும். சந்தேகத்தால் பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்று சேர்வர். தினந்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த பணமெல்லாம் வந்து சேரும். அதிக வட்டிக்கு வாங்கியிருந்த கடனில் ஒரு பகுதியை வசூல் செய்வீர்கள். ஜென்மச் சனி என்பதால் உடல் ஆரோக்கியத்திலும் உணவிலும் கவனம் தேவை. அதிக நீர் பருகுங்கள்.

உறவினர்கள், நண்பர்கள் சிலர் பணம் கேட்டு தொந்தரவு தருவார்கள். திடீர் பயணங்களால் வீண் அலைச்சல், டென்ஷன் ஏற்படும். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். வங்கிக் கடன் உதவியுடன் வீடு கட்டும் பணியை முடிப்பீர்கள். சொத்துப் பிரச்சினைகளில் அவசரம் வேண்டாம். மகளுக்கு கல்யாணம் விரைவில் நடக்கும். மகனின் கூடாநட்பு விலகும். 29.03.2023 முதல் 24.08.2023 வரை சனிபகவான் அதிசாரத்தில் 2ம் வீடான கும்ப ராசியில் சென்று பாதச்சனியாக அமர்வதால், இக்காலகட்டத்தில் யாரையும் நம்பி எந்த முடிவும் எடுக்காதீர்கள். பணம் கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையாக இருங்கள்.

### சனி பகவானின் பார்வை...

சனிபகவான் உங்களின் மூன்றாம் வீட்டைப் பார்ப்பதால் கௌரவப் பதவி வரும். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். சவால்களில் வெற்றி பெறுவீர்கள். சனி பகவான் உங்களின் ஏழாம் வீட்டைப் பார்ப்பதால் மனைவிக்கு கால் வலி, கழுத்து வலி வந்து நீங்கும். வீண் சந்தேகத்தை குறையுங்கள். சனி பகவான் பத்தாம் வீட்டைப் பார்ப்பதால் உத்தியோகத்தில் மரியாதை கூடும். சிலர் சுய தொழில் தொடங்க வாய்ப்பு உண்டாகும்.

### சனி பகவானின் நட்சத்திர சஞ்சாரம்

உங்களின் அட்டமாதிபதியான சூரியனின் உத்திராடம் நட்சத்திரத்தில் 27.12.2020 முதல் 27.12.2021 வரை சனி பகவான் செல்வதால் இக்காலகட்டத்தில் அதிர்ஷ்டவசமான வாய்ப்புகள் தேடி வரும். முடங்கிக் கிடந்த சில பணிகள் இனி முழுமையடையும். சொத்து வழக்கு சாதகமாக முடியும். 11.05.2021 முதல் 26.09.2021 வரை சனிபகவான் வக்ரத்தில் செல்வதால், வாகனத்தைக் கவனமாக இயக்குங்கள். மனஉளைச்சல்கள், வீண்பழி வந்து நீங்கும்.

உங்களின் சப்தமாதிபதியான சந்திரனின் திருவோணம் நட்சத்திரத்தில் 28.12.2021 முதல் 26.01.2023 வரை சனிபகவான் செல்வதால் மறைந்திருந்த திறமைகள் வெளிப்படும். மனைவி, பிள்ளைகளுக்கு தங்க ஆபரணம், ரத்தினம், ஆடைகளை வாங்கித் தருவீர்கள். 25.05.2022 முதல் 09.10.2022 வரை சனி பகவான் வக்ரத்தில் செல்வதால் வாழ்க்கைத் துணைவர் வழியில் வீண் அலைச்சல், செலவுகள் வந்து போகும்.

உங்களின் சுக லாபாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 27.01.2023 முதல் 19.12.2023 வரை சனி பகவான் செல்வதால், கௌரவப் பதவிகள் உங்களைத் தேடி வரும். சொந்த வீட்டுக்குக் குடிபுகுவீர்கள்.

இதற்கிடையில் 27.06.2023 முதல் 23.10.2023 வரை சனிபகவான் வக்ரமடைவதால் ஒரு சொத்தை விற்று மறு சொத்து வாங்குவீர்கள். மனைவியின் உடல்நலம் பாதிக்கும். மருத்துவச் செலவுகள் வந்துபோகும்.

இல்லத்தரசிகளே, சேமித்த பணத்தைக் கொண்டு ஆபரணங்கள் வாங்குவீர்கள். மாமியார், மாமனாருடன் மனஸ்தாபம் குறையும். அலுவலகம் செல்லும் பெண்களுக்குப் பணிச்சுமை குறையும். வியாபாரிகள் தடாலடியாக சில மாற்றங்கள் செய்வார்கள். சந்தை நிலவரங்களை அறிந்து செயல்படுவது நல்லது. சிலர், தவறான ஆலோசனைகளை வழங்கக்கூடும். கணிசமாக லாபம் உயரும். ஹோட்டல், கணினி உதிரி பாகங்கள், துணி வகைகளால் லாபமடைவீர்கள். பழைய மிகுதிகளை கனிவாகப் பேசி வசூலியுங்கள். பங்குதாரர்களிடம் வளைந்துகொடுத்து போங்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு வேலை அதிகரிக்கும். பழைய அதிகாரிகள் மாற்றப்பட்டு புது அதிகாரியால் உற்சாகம் அடைவீர்கள். தடைப்பட்ட சம்பள உயர்வு, பதவி உயர்வு தாமதம் இல்லாமல் கிடைக்கும். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும்போது உஷாராக இருங்கள். சட்டத்துக்குப் புறம்பான வகையில் யாருக்கும் உதவ வேண்டாம். கணினித் துறையினருக்கு வேலை அதிகரிக்கும்.

**பரிகாரம்:** இஷ்ட தெய்வங்களை வழிபடுவதால் கஷ்டங்கள் நீங்கும். சனிக்கிழமைகளில் எள் முடிச்சு தீபம் ஏற்றி சனிபகவானை வழிபடுங்கள்; பாதிப்புகள் அகன்று; மகிழ்ச்சி பெருகும்.

# மஹர சிறை விவகாரம்: 255 அறிக்கைகள் தாக்கல்

கொழும்பு, டிசெ.14

மஹர சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட மோதல் தொடர்பாக இதுவரை 255 அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மஹர சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பாக நேற்றுமுன்தினம் மேலும் 27 அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றுள் 11 அறிக்கைகள் சிறை அதிகாரிகளி டமும், 16 அறிக்கைகள் கைதிகளிடமும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நவம்பர் 29 முதல் இது வரையான காலப்பகுதியில் மொத்தம் 255 அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ற-இ)

# 500 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

மன்னாரில் புரேவி புயல் காரணமாக பாதிக்கப்பட்ட மேலும் 500 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

பெரியமடு, சன்னார் மற்றும் பேசாலை, மன்னார் பகுதிகளைச் சேர்ந்த புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முஸ்லிம் தொண்டு நிறுவனத்தின் நிதி அனுசரணையில் உலர் உணவுப் பொருள்களை நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் வழங்கி வைத்தார். (வ-56)





# 84 பயனாளிகளுக்கு காசோலை கையளிப்பு

கொடிகாமம், டிசெ.14

புதிய அரசின் "கிராமத்துக்கு ஒரு வீடு" என்ற திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 84 வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. (ற-159)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பணியாளருக்கு உலர் உணவு

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ் மாவட்டத்தில் உள்ள பனை தென்னைவள அபிவருத்தி கூட்டுறவு சங்கங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சங்கப் பணியாளர்களுக்கு உலர்உணவுப் பொருள்களை வழங்கி வருகின்றன.

சங்கங்களின் பணியாளர்கள், அங்கத்துவர்கள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த வெள்ள நிவாரணப் பொருள்களை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் வழங்கி வருகின்றன. அந்தவகையில தெல்லிப்பளை, சாவகச்சேரி, பண்டத்தரிப்பு, மானிப்பாய், அச்சுவேலி, கோண்டாவில் ஆகிய பனை தென்னனைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களே இந்தப் பணிகளை முன்னெடுத்து வருகின்றன. (ற-17)



# இன்றைய நாள்

**மேடம்:** சவாலான வேலைகளை முடிக்க சிரமப்படுவீர்கள். சலிப்பு ஏற்படும். உங்களால் பயணடைந்தவர்கள் இப்போது உதவி செய்வார்கள் பணியாளர்கள் உயர்நிலைக்கு வருவீர்கள். யோகம் வரும்.

**இடபம்:** பெரிய பதவியில் இருப்ப வர்களின் மூலம் உதவி கிடைக்கும். செய்யும் பணிகளுக்கு உதவுவதற்காக உங்களுடன் ஒருவர் துணை நிற்பார். முன்பிருந்த பகைகள் விலகும்.

**மிதுனம்:** பணி பற்றிய முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உழைப்புற்கேற்ற பலன் உண்டு. உங்கள் மீது மதிப்பு உயரும். குடும்பத்தினிடையே சமீபத்திய நிலை மாறி அன்பு கூடும்.

**கடகம்:** தாயார் மூலம் நன்மை உண்டு. புதிய நம்பிக்கை பிறக்கும். பிள்ளைகளின் திருமணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். தடைகள் நீங்கி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

**சிம்மம்:** முயற்சியைப் பெருக்குவீர்கள். கடன் பிரச்னை கட்டுக்குள் இருக்கும். நீங்கள் எடுக்கும் புதிய முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். பழைய முறைகளை மாற்றுவீர்கள்.

**கன்னி:** வெளியூரிலிருந்து நல்ல தகவல் வரலாம். சிக்கல் நீங்கும். நெருங்கிய நண்பர்களிடையே இருந்த மனஸ்தாபங்கள் நீங்கும். வளர்ச்சி அதிகரிக்கும். முயற்சியில் முன்னேற்றம் உண்டு.

**துலாம்:** வருங்கால நலன் பற்றிய முயற்சியில் வெற்றி கிடைக்கும். நண்பர்களுக்கு இடையே ஏற்பட்ட வாதத்தைத் தீர்த்து வைப்பீர்கள். கவனத்துடன் இருக்க வேண்டும்.

**விருச்சிகம்:** பணத்தேவை நிறைவேறும். உடன்பிறந்தோருக்கு உதவுவீர்கள். கணவர் பாராட்டுவார். குழந்தைகள் பற்றிய பிரச்னைகள் தீரும். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**தனுசு:** மனச்சுமை குறையும் நாள். உறவை ஒட்டுவதில் ஆர்வம் கூடும். நவீன பொருட்கள் வாங்குவதில் அதிகச் செலவு செய்யாதீர்கள். புதியவரின் அறிமுகம் கிடைக்கும்.

**மகரம்:** ஜாமீன் போட்ட தொகை திருப்பப்படுவதால் நிம்மதி ஏற்படும். பிள்ளைகளால் மனம் மகிழும் . மனச்சுமை உங்ககளால் குறையும் பெற்றோரின் ஆசி கிடைக்கும்.

**கும்பம்:** சொத்து சம்பந்தமான வழக்கு விஷயங்கள் தள்ளிப்போகும். புதிய விஷயங்களில் ஆர்வம் செலுத்தி கற்றுக் கொள்வீர்கள்.

**மீனம்:** பங்குச் சந்தையில் அதிக முதலீடுகள் செய்ய வேண்டாம், வாழ்க்கைத் துணையின் சகோதரர் மூலம் உதவி கிடைக்கும். தாய்வழி உறவினரிடமிருந்து நல்ல செய்தி ஒன்று வரும்.

# விமான நிலையங்கள் டிசெ.26 மீள இயங்கும்!

கொழும்பு, டிசெ.14

சர்வதேச பயணங்களுக்காக இலங்கை விமான நிலையங்கள் டிசெம்பர் 26 முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளன என்று சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத்தின் தலைவர் உபுல் தர்மதாச அறிவித்துள்ளார். இதன்படி, நாட்டின் கட்டுநாயக்க, மத்தன, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய விமான நிலையங்களில் வணிக விமானங்களை இயக்க அனுமதிக்கப்படவுள்ளது. இதில் பயணிகள் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் பின்னர் வழங்கப்படும் என்றும் சர்வதேச விமானங்களுக்குக்கான பயண விவரங்கள், அடுத்த சில நாள்களில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

## போதைப்பொருள் கடத்தல் பெண் உட்பட மூவர் கைது




கொழும்பு, டிசெ.14

டுபாயிலிருந்து இயக்கப்படும் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புடன் தொடர்புபட்டவர்கள் என பெண் ஒருவர் உட்பட மூவரை களனி பகுதியின் குற்றப்பிரிவு அதிகாரிகள் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

மூவரும் டுபாயிலிருந்து இயங்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் உள்ளூர் முகவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் டுபாயிலிருந்து கடல் வழியாக நாட்டுக்கு கடத்தப்படும் போதைப்பொருள்களை விநியோகிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் மேற்கொண்ட பணப் பரிவர்த்தனைகளை அடையாளம் காணும் வகையில் பொலிஸார் அவர்களின் வங்கிக் கணக்குகளை ஆய்வு செய்துவருகின்றனர் எனத் தெரியவருகிறது. (வ-இ)



## கணினி மயமானது சமுர்த்தி வங்கி

முல்லைத்தீவு, டிசெ.14

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான் சமுர்த்தி வங்கி கணினி மயப்படுத்தப்பட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வந்துலதிலகசிறியால் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

சமுர்த்தி வங்கிகளை கணினி மயமாக்கல் திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் முதலாவது வங்கியாகவும், தேசிய ரீதியில் நான்காவது வங்கியாகவும் இது தரமுயர்த்தப்பட்டுள்ளது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ரி.அகிலன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள் பணிப்பாளர் நாயகம் வந்துல்திலகசிறி மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர். இதன்போது பயனாளிகளின் ஒன்லைன் வைப்பு சேவை, கடன்வழங்கல் திட்டம் ஆகியனவும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (வ-இ)




## 20 குடும்பங்களுக்கு ஈரோஸ் அமைப்பால் உலர் உணவுப் பொதி

கிளிநொச்சி, டிசெ.14

ஈரோஸ் அமைப்பின் ஸ்தாபகர் இரட்ணசபாபதியின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கட்சியின் தேசிய அமைப்பாளர் தீபன் மார்க்ஸ் தலைமையில் ஈரோஸ் ஜனநாயக முற்போக்கு கூட்டமைப்பின் கிளிநொச்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் 20 ஏழைக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (வ-இ)

## வளர்ப்பு மாட்டைத் திருடி இறைச்சியாக்கிய கும்பல்

முல்லைத்தீவு, டிசெ. 14

முல்லைத்தீவு முள்ளியவளையில் வளர்ப்பு மாடு ஒன்று இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

முள்ளியவளை கற்பூரப்புல் இந்து மயானத்துக்கு அருகிலுள்ள பற்றைக்காட்டில் பசுமாட்டை வெட்டி இறைச்சியைக் கொண்டுசென்றுள்ளனர். அங்கு நான்கு கால்களும் தலையும் நெஞ்சுப் பகுதியும் எச்சங்களாகக் காணப்படுகின்றன.

கால்நடைகளை இறைச்சிக்காகத் திருடும் சம்பவங்கள் முள்ளியவளை பகுதியில் அதிகரித்துள்ளன என்று கூறப்பட்ட நிலையில், நேற்றும் ஒரு மாடு வெட்டப்பட்டுள்ளது. முள்ளியவளை பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, மாட்டு இறைச்சியை மான் இறைச்சி என்றுசொல்லி விற்பனை செய்யும் கும்பல் ஒன்று முள்ளியவளை பொலிஸாரால் அண்மையில் கண்டறியப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-19)

## வாழ்வாதார உதவி வழங்கல்

இந்திராபுரம் பகுதியில் இரு சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவரின் குடும்பத்துக்கு ஏர்நிலம் அமைப்பின் ஊடக வாழ்வாதார உதவியாக குழாய்க் கிணறு மற்றும் நீர் இறைக்கும் இயந்திரம் என்பன வழங்கப்பட்டுள்ளன.

அந்தக் குடும்பஸ்தரின் இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட நிலையில் தனது மனைவியின் சிறுநீரக மொன்றைப் பெற்று வாழ்ந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-6)

# சிறுபான்மையின மக்களின் மத உரிமையை உறுதிசெய்யவும்

## பிரிட்டன் நாடாளுமன்றத்தில் கோரிக்கை

**கொழும்பு, டிசெ. 14**

**இலங்கையிலுள்ள சிறுபான்மையினரின் மத உரிமைகளை இலங்கை அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பிரிட்டனின் ஆசியாவுக்கான வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அமைச்சர் நைஜல் அடம்ஸ் தெரிவித்தார்.**

கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலையில், மதச் சுதந்திரம் மீதான அச்சுறுத்தல்கள் குறித்த விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“கொரோனா வைரஸ் காரணமாக உயிரிழக்கும் அனைவரது உடல்களையும் கட்டாயமாக எரிக்க வேண்டும் என்ற இலங்கை அரசின் தீர்மானம் முஸ்லிம்களின் உணர்வுகளைப் பாதித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஊடாக இலங்கை அரசுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும்.

இலங்கையிலுள்ள முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் சிறுபான்மையினரின் மத உரிமைகளை இலங்கை அரசு உறுதி செய்ய வேண்டும்.

இலங்கை போன்ற நாடுகளின் ஸ்திரத்தன்மை சீர்குலைந்துள்ளதால், கிறிஸ்தவர்களும் அதிகமான சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்” என்றார். (து-22)

# வவுனியா மருத்துவமனையில் நோயாளிகள் இருப்பிடம் திறப்பு



வவுனியா, டிசெ.14

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் அமைக்கப்பட்ட நோயாளிகள் இருப்பிடம் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் தாங்கி என்பன நேற்று முன்தினம் திறக்கப்பட்டன.

கொவிட்-19 தொற்று நோய்த்தாக்கம் காரணமாக நோயாளிகளின் நலன் கருத்தி வவுனியா வர்த்தக சங்கத்தின் நிதியொதுக்கீட்டில் வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளிகள் இருப்பதற்கான இருப்பிடமும், அனைத்து விடுதிகள், வெளிநோயாளர் பிரிவு மற்றும் சிகிச்சைப் பிரிவுகள் என்பனவற்றை உள்ளடக்கி அனைத்து இடத்திலும் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் தாங்கி வசதியும் இவ்வாறு அமைத்து வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் க.நந்தகுமார் , வவுனியா வர்த்தக சங்க செயலாளர் ஆ.அம்பிகைபாலன் , வர்த்த சங்க உறுப்பினர்கள் , சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-18)

# தற்போதுள்ள கட்டடத்திலேயே நீதி அமைச்சின் செயற்பாடுகள்

## அறிக்கையில் குறிப்பிட்டது அமைச்சு

கொழும்பு, டிசெ. 14

நீதி அமைச்சின் செயற்பாடுகளை தற்போதுள்ள கட்டடத்திலேயே தொடர்ந்தும் முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நீதி அமைச்சுக்கு உரித்தான நிறுவனங்களுக்காக புதிய கட்டடத்தை வாடகைக்கு எடுப்பதற்கான யோசனை தொடர்பில் கலந்துரையாடியதன் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று நீதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான நீதிபதிகளின் எண்ணிக்கை அதிகரித்ததால், இட வசதிக்கான தேவை ஏற்பட்டுள்ளது. 17 நிறுவனங்களைச் சேர்ந்த 350 ஊழியர்களைக் கொண்ட அமைச்சகத்தை நீதிமன்ற வளாகத்துக்கு அருகிலுள்ள இடத்தில் நடத்திச் செல்வது முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக அடையாளம் காணப்பட்டது.

நீதித்துறை வீட்டுத்திட்ட வளாகத்துக்கு அமைச்சகத்தை இடமாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையில், நிர்மாண நடவடிக்கைகள் நிறைவடையும் வரை, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு உலக வர்த்தக மையத்துக்கு அமைச்சகத்தைக் கொண்டு செல்லவும் எதிர்பார்க்கப்பட்டது.

இதற்காக மாதாந்தம் 9.8 மில்லியன் ரூபா வாடகை செலுத்த நேரிடும்.

எவ்வாறாயினும், பல சுற்று பேச்சுக்களின் பின்னர், தற்போதுள்ள கட்டடத்தை பராமரிக்கவும், உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் விரிவாக்கத்துக்கு மாற்று இடங்களை உருவாக்கவும் நீதி அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று நீதி அமைச்சு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (த-இ)

# 5 ஆயிரம் கைதிகள் இந்த மாதம் விடுதலை

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 14

சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளில் சுமார் 5 ஆயிரம் பேரை இந்த மாத இறுதிக்குள் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே தெரிவித்துள்ளார்.

தற்போது 29 சிறைச்சாலைகள் மற்றும் இரண்டு புனர்வாழ்வு நிலையங்களில் 25 ஆயிரம் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சம்பந்தப்பட்ட நிலையங்களில் 11 ஆயிரத்து 200 பேரை மட்டுமே தடுத்து வைக்க முடியும் என்றும் லொஹான் ரத்வத்தே சுட்டிக்காட்டினார்.


சிறு குற்றங்களுக்கு தண்டம் செலுத்த முடியாத கைதிகளும் பிணையில் செல்ல முடியாத மற்றவர்களும் விடுவிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

# பதவி விலகுகின்றார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, டிசெ. 14

ஜாதிக ஹெல உறுமய அமைப்பின் பொதுச் செயலாளர் பட்டலி சம்பிக்க ரணவக்க தனது பதவியை இராஜினாமா செய்கின்றேன் என்று அறிவித்துள்ளார்.

புதிய அரசியல் மற்றும் சமூக சக்தியைக் கட்டியெழுப்பும் பொருட்டு பதவி விலகியுள்ளேன் என்று சம்பிக்க குறிப்பிட்டுள்ளார். (த-இ)



வவுனியாவில் பொதுமக்கள் அதிகளவில் பயன்படுத்தும் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனை நேற்று முன்தினம் தொற்று நீக்கம் செய்யப்பட்டது. வவுனியா நகரசபை தவிசாளரின் ஆலோசனைக்கமைய இது நடைபெற்றது. (த-18)



## இன்னும் பரிசோதிக்கப்படவில்லை

# கொரோனா பானத்தை எவரும் அருந்தாதீர்கள்

கொழும்பு, டிசெ. 14

மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படாத எந்தவொரு மருந்தையும் கொரோனாத் தொற்றுக்கான மருந்து எனக் கருதி அருந்த வேண்டாம் என்று நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய ஆராய்ச்சி கழகம் இந்த அறிவித்தலை விடுத்திருக்கிறது.

தமது ஆராய்ச்சிக் கழகத்தில் மூன்று மருந்துகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்றும் அதில் மருத்துவர் தம்மிக்க பண்டாரவின் ஆயுர்வேத மருந்தும் அடங்குகின்றது என்றும் ஆராய்ச்சிக் கழகம் தெரிவித்திருக்கிறது.

சுதேச வைத்தியர் தம்மிக்க பண்டார தயாரித்துள்ளார் எனக் கூறப்படும் இந்த கொரோனாத் தொற்று மருந்தை அண்மையில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி உட்பட்ட அமைச்சர்களும், சபாநாயகர் உட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் அருந்திய காட்சிகள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், சுதேச மருத்துவராகத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட தம்மிக்க பண்டார தேசிய சுகாதாரத் துறையில் ஒரு வைத்தியராக பதிவு செய்திருக்கவில்லை என்று ஆயுர்வேத திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (த-இ)

# ஆசிகுளம் காணிகள் ஆக்கிரமிப்பு இன அழிப்பின் மற்றொரு வடிவம்

## எம்.பி கஜேந்திரன் தெரிவிப்பு

வவுனியா, டிசெ.14

வவுனியா ஆசிகுளம் கிராம மக்களின் பூர்வீகக் காணிகளை வன வள திணைக்களத்தினர் தமக்கு சொந்தமான காணி எனக் கூறி எல்லைப் படுத்தியுள்ளமை அரசால் முன்னெடுக்கப்படும் இனஅழிப்பு செயற்பாட்டின் மற்றுமொரு வடிவமாகவே அமைந்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆசிகுளம் கிராம மக்கள் 1985 ஆம் ஆண்டு தொடக்கம் குறிப்பிட்ட காணியை துப்பரவு செய்து பாராமரித்து வந்துள்ளனர். கடந்த கால யுத்த நிலைமை காரணமாக அந்தப் பகுதியில் பற்றைக் காடுகள் வளர்ந்துள்ளன.

அதனை துப்புரவு செய்து பயிர்ச் செய்கை மேற்கொள்ள முற்பட்ட போது அதைத் தடுத்து நிறுத்திய வனவள திணைக்களத்தினர் இக் காணி வனவள திணைக்களத்துக் குச் சொந்தமானது எனக் கூறியுள்ளனர். இது தொடர்பில் வவுனியா ஆசிகுளம் கிராம மக்களை கஜேந்திரன் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியதுடன் அவர்களது ஆவணங்களைப் பார்வையிட்டிருந்தார். இதன் பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். (வ-110)





# 45 கிணறுகளுக்கு குளோரினிடப்பட்டது

பருத்தித்துறை, டிசெ.14

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்குட்பட்ட 5 பொதுக் கிணறுகள் உட்பட 45 கிணறுகளுக்கு குளோரினிடும் விசேட செயற்றிட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

பருத்தித்துறை பகுதியின் பிரிவு 2 பகுதிக்குள் அடங்கும் ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள பொதுக்கிணறுகளும் வெள்ள நீரால் மாசடைந்த வீட்டுக் கிணறுகளும் இனங் காணப்பட்டு இவ்வாறு குளோரினிடப்பட்டன.

முன்னதாக செயற்றிட்டத்தில் பங்குபற்றுவர்களுக்கு குளோரினிடும் சரியான முறை பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது. (வ-9,159)

# அரியாலையில் இளைஞர் குழு அடாவடி

யாழ்ப்பாணம், டிசெ.14

அரியாலை முள்ளி பகுதியில் மூன்று பேர் கொண்ட இளைஞர் குழுவொன்று நேற்று முன்தினம் அடாவடியில் ஈடுபட்டுள்ளது.

வீதியால் சென்றவர்கள் மீது பொல்லுகளால் தாக்குதல் நடத்தியதுடன் அருகில் இருந்த வீடு ஒன்றின் மீதும் கடை ஒன்றின் மீதும் இவர்கள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

மேலும் கால்நடைகளுக்கு குலை வெட்டிச் சென்ற வரை இவர்கள் தாக்கியதில் அவர் கத்தியொன்றை விட்டுச் சென்றுள்ளார்.

அதை எடுத்து வீதியால் சென்ற மற்றொருவர் மீதும் இவர்கள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இந்தக் குழுவின் தாக்குதலில் காயமடைந்த இருவர் யாழ் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞர்களே இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் எனவும் இது போன்ற பல சம்பவங்கள் நடந்தும் இதுவரை யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரியவருகின்றது. (வ-இ)

# ரூபா 8 மில்லியன் செலவில் நான்கு வீதிகள் புனரமைப்பு

கொடிகாமம், டிசெ.14 தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நிறைவான கிராமம் திட்டத்தின் ஊடாக நான்கு வீதிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.



நாவற்குழி கிழக்கு ஜே/295 கிராம அலுவலர் பிரிவிலுள்ள பூதவராயர் வீதி, கைதடி கிழக்கு ஜே /289 கிராம அலுவலர் பிரிவிலுள்ள தொத்தாகூடல் வீதி, அல்லாரை ஜே/322 கிராம அலுவலர் பிரிவிலுள்ள அறுகம்புலம்பிள்ளையார் வீதி மற்றும் கச்சாய் ஜே/324 கிராம அலுவலர் பிரிவிலுள்ள கச்சாய் அம்மன் ஆலய வீதி ஆகியன இந்த திட்டத்தில் உள்வாங்கப்பட்டு அவற்றுக்கான அடிக்கல்கள் நட்டு வைக்கப்பட்டன.

எட்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த நான்கு வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன. (ற-159)

# வாகன விபத்தில் பெண் உயிரிழப்பு

தம்புள்ளை, டிசெ.14

கெகிராவை- தம்புள்ளை வீதியின் சூரியகம சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். கெகிராவையில் இருந்து தம்புள்ளை நோக்கி பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். விபத்துக்குள்ளான மற்றைய மோட்டார் சைக்கிளின் சாரதி தம்புள்ளை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-இ)

# ஓய்வூதியத்துக்கான திகதிகள் அறிவிப்பு!

சாவகச்சேரி, டிசெ.14

2021 ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியம் பெறு வதற்கான திகதிகள் பற்றிய விபரங்கள் ஓய்வூதியத் திணைக்களத்தால் அறிவிக்கப் பட்டுள்ளன.

இதன் பிரகாரம் எதிர்வரும் ஜனவரி 8, பெப்ரவரி 10, மார்ச் 10, ஏப்ரல் 8, மே 10, ஜூன் 10, ஜூலை 9, ஒகஸ்ட் 10, செப்ரெம்பர் 10, ஒக்ரோபர் 8, நவம்பர் 10, டிசெம்பர் 10 ஆகிய திகதிகளில் ஓய்வூதியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

# கொரோனா விழிப்புணர்வு

கிளிநொச்சி, டிசெ.14

சமத்துவக் கட்சி இளைஞர் அணியால் வருமுன் காத்து சமூகத்தை பாதுகாப்போம் எனும் கருப்பொருளில் கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்று கிளிநொச்சியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சியில் முறுகண்டி, இரணைமடு சந்தி, மருத்துவமனை முன்பாக, மற்றும் கிளிநொச்சி பொதுச் சந்தை பேருந்து நிலையம் போன்ற மக்கள் அதிகம் கூடுகின்ற இடங்களில் இந்த விழிப்புணர்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.



இதில் பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள், மற்றும் கொரோனா தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய துண்டுப்பிரசுரமும் வழங்கி வைக்கப்பட்டது. (வ-214)

# ‘இலம்பி’ வடக்கில் மாடுகளை வதைக்கும் தோல் நோய்



வைத்திய கலாநிதி
சுப்பிரமணியம் கஜறஞ்சன்
*கால்நடை வைத்திய அதிகாரி, கிளிநொச்சி.*

கிளிநொச்சியில் மாடுகளிடையே புதிய வகை வைரஸ் நோய் பரவி வருகின்றது. இலம்பி என்று அடையாளப்படுத்தப்படுகின்றது இந்த நோய். ஆபிரிக்க நாடுகளில் 1988ஆம் ஆண்டுகளில் கண்டறியப்பட்ட இவ் வைரஸ் நோய் 2019ஆம் ஆண்டு எமது அயல் நாடான இந்தியாவிலும் அடையாளம் காணப்பட்டுள்ளது. தற்போது வடக்கு மாகாணத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் இந் நோய் காணப்படுகின்றது. எனினும் கிளிநொச்சியில் இதன் தாக்கம் அதிகம் உணரப்பட்டுள்ளது.

இந் நோய்த் தாக்கம் உள்ளூர் இன மாடுகளை விட கலப்பின மாடுகளில் அதிகமாகக் காணப்படுவதுடன் எல்லா வயது மட்டங்களையும் தாக்குகின்றபோதும் கன்றுகளில் இதன் பாதிப்பு மிக அதிகமாக இருக்கும். இதன் நோய் அரும்புகாலம் 4-14 நாள்கள் ஆகும். நோய்த்தாக்கம் 40 வீதமாகவும் இறப்பு 2 வீதமாகவும் உள்ளமை ஆய்வுகள் மூலம் அறியப்பட்டுள்ளது.

**நோய் அறிகுறிகள்**

இந்த நோயின் பிரதான அறிகுறிகளாக காய்ச்சல், பசியின்மை, அதிக உமிழ்நீர் வெளியேறல், சளி வடிதல், கண்கள் சிவத்தல், கண்ணீர் வடிதல், உடல் தளர்ச்சி அடைதல், எடை குறைதல், பால் உற்பத்தி குறைதல் ஆகிய ஆரம்ப அறிகுறிகளுடன் உடலின் பெரும்பாலான பகுதிகளின் தோலில் 25 சென்ரி மீற்றர் அளவுடைய கட்டிகள் உருவாகும். அத்துடன் அக அங்கங்களான வாய், மூச்சுக்குழல், குடல், சுவாசப்பை ஆகியவற்றிலும் கட்டிகள் உருவாகலாம். கட்டிகள் உடைந்து புண்ணாகுவதுடன் தோலில் உள்ள கட்டிகள் வெடித்து புண்ணாகி புளுக்கொண்ட புண்களாக மாற்றமடையும்.

அது மட்டுமன்றி கழுத்துப் பகுதியிலும், கால்களிலும் வீக்கம் ஏற்படும். இதனால் மாடுகள் நடக்க கஸ்டப்படும். அத்துடன் நிணநீர் கணுக்கள் வீங்கி காணப்படும்.

இந்த நோயின் நீண்டகால தாக்கமாக ஆரம்ப கால சினைப்பசுக்களில் கருச்சிதைவு ஏற்படலாம். அத்துடன் மடி அழற்சி, மலட்டுத் தன்மை என்பன ஏற்படவும் வாய்ப்புக்கள் உண்டு.

**நோய் எவ்வாறு பரவுகின்றது?**

இந் நோய் நுளம்பு, இலையான், உண்ணிகள் மூலமே அதிகமாகக் கடத்தப்பட்டு தொற்று ஏற்படுகின்றது. எனினும் கால்வாய் நோய் பரவல் போன்று மனிதனாலும், வாகனங்களாலும் கடத்தப்படலாம். மேலும் மாடுகளை ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு கொண்டு செல்லும் போதும் மற்றும் நோய்த்தாக்கத்துக்கு உள்ளான மாடுகளின் உமிழ்நீர், சளி, பால், விந்து மூலமும் இந்நோய் பரவலடையலாம். இந் நோய் மனிதனில் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதுடன் ஆடு, செம்மறி ஆகிய கால்நடைகளிலும் இந் நோய் ஏற்படாது என்பதுடன் மாடுகள், எருமைகள் மட்டுமே இந் நோயினால் பாதிக்கப்படும்.



**எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?**

இது ஒரு வைரஸ் நோய் என்பதால் வேகமாக பரவக் கூடியது. எனவே இந் நோயைக் கடத்துகின்ற நுளம்பு, இலையான், உண்ணி ஆகியவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும்.

1. நோய் வாய்ப்பட்ட மாடுகளை தனிமைப்படுத்தி சிகிச்சை வழங்க வேண்டும்.
2. மனிதனும் இந்த நோயை காவிச் செல்லும் காவியாக இருப்பதால் பல்வேறு தேவைகளுக்காக மாடுகளுடன் தொடர்புபடும் மனிதர்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். கிருமி கொல்லியாக பொட்டாசியம் பேமங்கனேற்று (கொண்டிஸ்) பயன்படுத்தலாம்.
3. நோய் வாய்ப்பட்ட இடங்களில் இருந்து கால்நடைகளை எடுத்துச் செல்லல் தவிர்க்கப்படல் வேண்டும்.
4. பால் கொள்வனவின் போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதுடன் பால் கான்கள், பால் சேகரிப்பு வாகனங்கள் என்பன உரிய முறையில் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்படல் வேண்டும்.
5. கால்நடை வைத்தியரின் ஆலோசனையைப் பெற்று பொருத்தமான சிகிச்சை வழங்குவதன் மூலம் இரண்டாம் நிலை தொற்றைக் கட்டுப்படுத்தி விரைவில் குணமடையச் செய்யலாம்.

மேலும் இந் நோயை கட்டுப்படுத்துவதற்காக மரபு சார் மூலிகை மருத்துவமும் முக்கிய பங்கு வகிக்கின்றது என்பதை பண்ணையாளர்கள் அனுபவரீதியாக உறுதிப்படுத்தப்படுத்தியுள்ளனர்.

**வாய்மூலம் கொடுக்க வேண்டிய மருந்து**

| | |
|---|---|
| வெற்றிலை | - 10 |
| மிளகு | - 1 கரண்டி |
| உப்பு | - 1 கரண்டி |
| சர்க்கரை | -1 கட்டி |

மேற்கூறப்பட்ட பொருள்களை சேர்த்து அரைத்து நோய்வாய்ப்பட்ட மாட்டின் நாக்கில் முதலாம் நாள் மூன்று மணித்தியாலத்துக்கு ஒரு தடவையும் இரண்டாம் நாளில் இருந்து நாள் ஒன்றுக்கு 3 தடவை என்றவாறு ஒரு கிழமைக்கு தொடர்ச்சியாகப் பூசுவதன் மூலம் இந்த நோயை விரைவில் குணமாக்கலாம்.

மாட்டின் வெளிப்புற உடலில் தோன்றும் கட்டிகளுக்கும், வீக்கத்துக்கும் பின்வரும் மூலிகைகள் கொண்ட எண்ணெய் தயாரித்துப் பூசுவதன் மூலம் சிறந்த பயனை பண்ணையாளர்கள் பெற்று வருகின்றனர்.

| | |
|---|---|
| வேப்பிலை | – 1 கைப்பிடி |
| துளசி இலை | – 1 கைப்பிடி |
| குப்பைமேனி இலை | – 1 கைப்பிடி |
| மருதாணி இலை | – 1 கைப்பிடி |
| மஞ்சள் தூள் | – 1 தேக்கரண்டி |
| உள்ளி (பூண்டு) | – 10 பல்லு |

மேற்கூறப்பட்ட பொருள்களை அரைத்துபின்னர் அதை அரை லீற்றர் தேங்காய் எண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி வடித்து கட்டிகளுக்கும், வீக்கத்துக்கும் பூசுவதன் மூலம் விரைவில் குணமடையச் செய்யலாம்.

மேலும் இந் நோயைக் கடத்தலில் நுளம்பு, இலையான், உண்ணி முக்கிய பங்கு வகிப்பதனால் இவற்றை கட்டுப்படுத்துவதற்கான பொதுவான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் பின்வரும் எண்ணெய்களை சம அளவில் கலந்து பெறப்படும் கலவையை மாடுகளில் நீளப்பாட்டில் சிறிய தூரிகை கொண்டு காலை, மாலையில் கோடுகளாகக் கீறி விடுதல் மூலம் நல்ல பயனைப் பெறமுடியும்.

- தேங்காய் எண்ணெய்
- வேப்பம் எண்ணெய்
- புங்கம் எண்ணெய்

மேற்படி மரபு சார் மருத்துவங்கள் வருமுன் காக்கும் மருந்துகளாகவும் பயன்படுத்த முடியும். எனவே எமது மாவட்டத்தில் வேகமாகப் பரவி வரும் இவ் வைரஸ் நோயைக் கட்டுப்படுத்துவதில் பண்ணையாளர்களின் பங்களிப்பு மிக அதிகளவில் இருக்குமாயின் எம்மால் இந் நோயை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்த முடியும்.

# இலங்கை - இந்திய மீனவருக்குள் பகை ஏற்படுத்துகிறதா கடற்படை?

ரவிகரன் காட்டம்

முல்லைத்தீவு, டிசெ.14

**இலங்கை மீனவர்களுக்கும், தமிழ் நாட்டுமீனவர்களுக்கும் இடையில் சண்டை ஏற்படுத்துவதே, இலங்கை கடற்படையின் எண்ணமாக இருக்கின்றது என்று வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்திய மீனவர்கள் தமது நாட்டின் எல்லையைக் கடந்து எமது கடற்பரப்புக்குள் நுழைகின்றனர். இந்த விடயத்தை இலங்கை கடற்படையினர் கண்டுகொள்ளாதிருக்கின்றனர். இதனை விட எமது மீனவர்கள் ஏற்கனவே தென்னிலங்கை மீனவர்களுடைய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது இந்திய இழுவைப்படகுகளால் இறால் தொழில் முற்றாகப் பாதிப்படையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இப்படியான நிலையில் அரச அதிகாரிகளான நீங்கள் இப் பிரச்சினைக்குரிய தீர்வைப் பெற்றுத்தரப் போகின்றீர்களா, அல்லது நாங்கள் நடவடிக்கை எடுக்கவா? கடற்படையினருக்கு கடலைக் கண்காணிப்பதற்கு இயலவில்லையா? நாங்கள் எமது கடலை படை அமைத்து நாமே பார்த்துக்கொள்வோம். எமது மீனவர்கள் அதற்குத் தயாராக இருக்கின்றார்கள் - என்றார். (ப)

## ஷானிக்கு எதிராக முறையிட அழுத்தம்?

கொழும்பு, டிசெ.14

பணி இடை நிறுத்தப்பட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஷானி அபேசேகரவுக்கு எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் வெளிநாட்டில் உள்ளோருக்கு முறைப்பாடளிக்க அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொலிஸ் அதிகாரி என தன்னை அடையாளப்படுத்திக்கொண்டு தொலைபேசியில் அழைத்த நபர் ஒருவர், ஷானிக்கு எதிராக முறைப்பாடளிக்க தன்னிடம் கோரிக்கை முன்வைத்தார் என சுவீடனில் உள்ள இலங்கைப் பெண் ஒருவர் சர்வதேச ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

பெண் ஒருவர் அவ்வாறான முறைப்பாடு அளித்துள்ளமை தொடர்பில் அப்போதைய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகரவும் கடந்த ஒக்ரோபர் 25 ஆம் திகதி ஊடகவியலாளர் சந்திப்பில் உறுதி செய்திருந்தார். (ப)



இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்சவுக்கும், கிளிநொச்சி மாவட்ட சிவில் சமூக ஆர்வலர்களுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை விளையாட்டுத்துறை அமைச்சில் நடைபெற்றது. (ஐ-ரி4)

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணை முடியும்வரை வழக்கு இல்லை

கொழும்பு, டிசெ.14

ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் முடியும் வரை தாக்குதல் சம்பந்தமாக தனித்தனியாக வழக்கு தொடர்வது என எடுத்த தீர்மானத்தை தாமதிப்பது குறித்து சட்டமா அதிபர் திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்ற இடங்கள் சம்பந்தமாக தனித்தனியாக வழக்குத் தொடர இதற்கு முன்னர் சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித்திருந்தது. எனினும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் இதுவரை முடிவடையவில்லை. ஆணைக்குழுவின் விசாரணைகள் முடிவடைந்த பின்னர், ஜனாதிபதியிடம் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது. இதனையடுத்து அந்த அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளிக்கப்படும். விசாரணை அறிக்கையை ஆராய்ந்த பின்னர் வழக்குகளைத் தொடர சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித்துள்ளது. வழக்குத் தொடர காரணமாக இருக்கும் விடயங்கள் மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை ஆகியவற்றுக்கு இடையில் முரண்பாடுகள் இருந்தால், வழக்குகளை முன்னெடுத்துச் செல்ல தடையேற்படும் என்பதே இதற்கு காரணம் என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

## நில அதிர்வு பதிவாகும் இடங்கள் கண்காணிப்பு

கொழும்பு,டிசெ.14

சுண்ணக்கல் பாறை அடுக்குகளை அண்மித்து நில அதிர்வுகள் பதிவாகும் இடங்களில், கண்காணிப்பு இயந்திரங்களைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

விக்டோரியா நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதிகளில் சிறிய அளவான நில அதிர்வுகள் பதிவானமை தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய இந்த நடவடிக்கை, அடுத்த கட்ட விசாரணைகளுக்குப் பயன்படும் என்று புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் அனுர வல்பொல தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இந்த நில அதிர்வுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, அடுத்த வாரமளவில் கூடவுள்ளது.

மீண்டும் நில அதிர்வு பதிவாகுமாயின், அதனால் ஏற்படக்கூடிய சேதங்களை எவ்வாறு தவிர்ப்பது என்பது தொடர்பில் ஆராயப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## கேரளக் கஞ்சா கடத்தியவர் கைது!

கந்தளாய், டிசெ.14

ஹொரவப்பொத்தனை-பத்தேவ பிரதேசத்தில் ஒரு கிலோ கிராம் கேரளக் கஞ்சாவை கடத்திய குற்றச்சாட்டில் 37 வயதான நபர் ஒருவரை கந்தளாய் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இந்த சந்தேக நபர் ஹொரவப்பொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரியவருகின்றது. கைதுசெய்யப்பட்டவர் கெப்பத்திகொல்லேவ நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (ற-இ)



## மண்டலாபிஷேகம்

கொடிகாமம்,டிசெ.14

மறவன்புலோ ஐயப்பன் ஆலயத்தில் மண்டலாபிஷேக பெருவிழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

சிறீசடகோப ராமாயண ஐயப்ப பக்தர் சபையின் சாமியார்கள், வேலணை அஸ்த தீவுகளின் யாத்திரிக குழுவினர் மற்றும் தென்மராட்சி மறவன் புலவு அடியார்கள் ஆகியோர் ஐயப்பனுக்கு பால் காப்பிட்டு வழிபாட்டில் ஈடுபட்டனர். (ஐ-159)

# கழிவுகளை அப்புறப்படுங்கள் இல்லையேல் பாதிப்பு நிச்சயம்

*முல்லை. அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வலியுறுத்து*


முல்லைத்தீவு, டிசெ.14

முல்லைத்தீவு நகரை அண்டிய கடற்கரையோரங்களில் கரையொதுங்கியுள்ள வெளிநாட்டுக் கழிவுகளை உடனடியாக அப்புறப்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்க ளின் இணையத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்தோடு கரை ஒதுங்கியுள்ள குறித்த கழிவுப்பொருள்களை உடனடியாக அப்புறப்படுத்தா விடில் முல்லைத்தீவின் கரையோரக் கிராமங்கள் சுகாதார சீர்கேட்டை எதிர்கொள்ளும் அபாயம் உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்தக் கழிவுப் பொருள்கள் சுற்றாடலுக்கு மாத்திரமல்லாது, கடல்வாழ் உயிரினங்களுக்கும், ஏனைய விலங்குகளுக்கும் தீங்கிழைக்கக்கூடிய வகையில் காணப்படுகின்றன. கழிவுப் பொருள்களை உரியவர்கள் அவசரமாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு விரைவில் இக் கழிவுகளை அப்புறப்படுத்தாது விட்டால், கரையோரக் கால்நடைகள் உட்பட வளர்ப்புப் பிராணிகளுக்கு பாதிப்பு ஏற்படுவதுடன், சுற்றுச் சூழல் பாதிப்பும் ஏற்பட்டு, பெரும் சுகாதார நெருக்கடிக்குள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரக் கிராமங்கள் தள்ளப்படும் என்றார். (ப-246)

# சொந்த நாட்டுக்கு பறந்தார் கிப்ஸ்!



கொழும்பு, டிசெ.14
தென்னாபிரிக்க அணி முன்னாள் துடுப்பாட்ட வீரர் கிப்ஸ், கொழும்பு கிங்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
தற்போது லங்கா பிறிமியர் லீக் நடைபெற்றுவரும் நிலையில், கொழும்பு கிங்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக கிப்ஸ் செயற்பட்டு வந்தார்.
அவரது குடும்ப உறுப்பினர்கள் 3 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதால், அந்தப் பதவியில் இருந்து விலகி அவர் அவசரமாக சொந்த நாடு திரும்பியுள்ளார்.
கிப்ஸ் கொழும்பு கிங்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளர் பதவிக்காக கொழும்பு வரவில்லை. வர்ணனையாளராகத்தான் வந்தார். கொழும்பு அணியின் தலைமை பயிற்சியாளர் வட்மோர் அந்தப் பதவியில் இருந்து வெளியேறியதை அடுத்து, கபீர் அலி பதவியாளராக நியமிக்கப்பட்டார். அவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்ட, கிப்ஸ் தலைமை பயிற்சியாளராக செயல்பட்டு வந்தார். (எ)

# மக்ஸ்வெல் அதிரடியால் துவண்டது பிரிஸ்பேன் ஹீட்

கான்பேரா, டிசெ.14
பிக் பாஷ் லீக் ரி20 கிரிக்கெட்டில் பிரிஸ்பேன் ஹீட் அணியை வீழ்த்தி மெல்போர்ன் ஸ்டார்ஸ் அணி வெற்றி பெற்றது.
இந்த அணி நாதன் கவுல்டர்நைலின் சிறப்பான பந்து வீச்சாலும், மக்ஸ்வெல்லின் அதிரடியான ஆட்டத்தாலும் வெற்றி பெற்றது.
ஆஸ்திரேலியாவில் நடைபெறும் பிக் பாஷ் லீக் ரி20 கிரிக்கெட் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. அதன் 2 ஆவது ஆட்டத்தில் மெல்போர்ன் ஸ்டார்ஸ் பிரிஸ்பேன் ஹீட்ஸ் அணிகள் மோதின.
முதலில் பிரிஸ்பேன் ஹீட்ஸ் அணி துடுப்பாட்டம் செய்தது. நாதன் கவுல்டர்நைல் சிறப்பாக பந்து வீசி பிரிஸ்பேன் ஹீட் அணியால் அனைத்து இலக்குகளையும் இழந்து 19.5 பந்துகளில் 125 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.
பின்னர் மெல்போர்ன் ஸ்டார்ஸ் துடுப்பாட்டம் செய்தது. தொடக்க வீரர்கள் சொதப்பிய நிலையில் ஹில்டன் கார்ட்ரைட் ஆட்டமிழக்காமல் 42 பந்தில் 46 ஓட்டங்களும், கிளென் மேக்ஸ்வெல் 26 பந்தில் 46 ஓட்டங்களும் அடிக்க மெல்போர்ன் ஸ்டார்ஸ் 17.1 பந்துகளில் 4 இலக்குகள் இழப்புக்கு 129 ஓட்டங்கள் எடுத்து 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (றஇ)

# அடுத்த சுற்றுக்குள் ரியல் மாட்ரிட் அணி




லண்டன், டிசெ.14
ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியில் 3 ஆவது வெற்றியை பெற்ற ரியல் மாட்ரிட் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.
ஐரோப்பிய கழக அணிகளுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டித் தொடர் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகிறது. மட்ரிட்டில் நடந்த 'பி' பிரிவு லீக் ஆட்டம் ஒன்றில் 13 முறை சம்பியனான ரியல் மாட்ரிட் (ஸ்பெயின்) அணி, மான்செங்பாக் (ஜேர்மனி) அணியைச் சந்தித்தது.
விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ரியல் மாட்ரிட் அணி தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. 9 ஆவது நிமித்தில் ரியல் மாட்ரிட் அணி முதல் கோல் அடித்தது. அந்த அணி வீரர் லூகாஸ் வஸ்குஸ் கோலை நோக்கி அடித்த பந்தை சக வீரர் கரிம் பென்ஜிமா தலையால் முட்டி அருமையாக கோலாக்கினார்.
31ஆவது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் அணி மீண்டும் கோல் அடித்தது. முதல் கோலை அடித்த கரிம் பென்ஜிமா இந்த கோலையும் தலையால் முட்டி அடித்து அசத்தினார். பதில் கோல் திருப்ப மான்செங்பாக் அணியினர் எடுத்த கடும் முயற்சிக்கு கடைசி வரை பலன் கிடைக்கவில்லை. முடிவில் ரியல் மாட்ரிட் அணி 2:0 என்ற கோல் கணக்கில் மான்செங்பாக் அணியை வீழ்த்தியது.
6 ஆவது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் ஆடிய ரியல் மாட்ரிட் அணி பெற்ற 3 ஆவது வெற்றி இதுவாகும். ஒரு ஆட்டத்தில் சமநிலையும், 2 தோல்வியும் கண்டு இருந்த ரியல் மாட்ரிட் அணி இந்த வெற்றியின் மூலம் தனது பிரிவில் 3 ஆவது இடத்தில் இருந்து அதிரடியாக முன்னேறி முதலிடத்தைப் (10 புள்ளிகள்) பிடித்ததுடன், கால் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கும் தகுதி பெற்றது. (ற,இ)

# தொடக்க வீரருக்கு ராகுலே பொருத்தம்

## நெஹ்ரா தெரிவிப்பு

சென்னை, டிசெ.14
மயங்க் அகர்வால் உடன் கேஎல் ராகுலை தொடக்க வீரராக களம் இறக்க வேண்டும் என முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் ஆஷிஷ் நெஹ்ரா தெரிவித்துள்ளார்.
ஆஸ்திரேலியா இந்தியா இடையிலான முதல் டெஸ்ட் எதிர்வரும் 17ஆம் திகதி தொடங்குகிறது. இந்திய அணியில் மயங்க் அகர்வால் தொடக்க வீரராக களம் இறங்குவார். மற்றொரு வீரர் யார்? என்பதில் குழப்பம் நீடித்து வருகிறது.
அதில் பிரித்வி ஷா, ஷுப்மான் கில் இடையே கடும் போட்டி நிலவுகிறது. ஆனால், ஆஷிஷ் நெஹ்ரா கேஎல் ராகுலைத்தான் தொடக்க வீரராக களம் இறக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது
மயங்க் அகர்வாலுடன் தொடக்க வீரராக களம் இறங்கும் மற்றொரு வீரர் யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது, இதை நான் பலவீனம் என்று அழைக்க மாட்டேன். ஆனால், உறுதியாக இந்த விசயம் கவலை அளிக்கக்கூடியதாக இருக்கும். ஷுப்மான் கில் அல்லது பிரித்வி ஷாவை நீங்கள் சொல்லலாம்.
ஆனால், கேஎல் ராகுல் தொடக்க வீரராக களம் இறங்க வேண்டும் என நான் நம்புகிறேன் என்றார். (எ)






# முதல் இடத்தில் வெர்ஸ்டாப்பன்

அபுதாபி, டிசெ.14
பார்முலா 1 பந்தயத்தின் இந்த வருடத்துக்கான கடைசி கிராண்ட் பிரி அபு தாபி கிராண்ட் பிரி பந்தயத்தில் வெர்ஸ்டாப்பன் முதல் இடத்தை பிடித்தார்.
பார்முலா 1 கார்பந்தயம் ஒவ்வொரு ஆண்டும் பல சுற்றுக்களாக நடைபெறும். ஒட்டுமொத்தமாக வெற்றி பெற்ற புள்ளிகள் அடிப்படையில் சம்பியன் பட்டம் வழங்கப்படும். இந்த ஆண்டுக்கான பார்முலா 1இன் கடைசிச் சுற்றும், 17ஆவது போட்டியுமான அபு தாபி கிராண்ட் பிரி நேற்று நடைபெற்றது.
அதில் ரெட் புல் வீரர் வெர்ஸ்டாப்பன் முதலிடம் பிடித்தார். மெர்சிடெஸ் வீரர் போட்டாஸ் 2ஆவது இடம் பிடித்தார். மற்றொரு மெர்சிடெஸ் வீரரும், சம்பியன் பட்டத்தை உறுதி செய்தவருமான லீவிஸ் ஹாமில்டன் 3ஆவது இடத்தையும் பிடித்தனர்.
பார்முலா1 பந்தயத்தில் லீவிஸ் ஹாமில்டன் 347 புள்ளிகள் பெற்றுள்ளார். வால்ட்டெரி போட்டாஸ் 223 புள்ளிகளும், மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் 223 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். (எ)

# UNIVERSITY OF JAFFNA
## FACULTY OF AGRICULTURE
## ADMISSION OF PUBLIC OFFICERS FOR DEGREE PROGRAMME IN B.Sc. AGRICULTURE (2019/2020)

Applications will be entertained by the Dean, Faculty of Agriculture University of Jaffna for the Admission of Public Officers for Degree Program to follow B.Sc (Agriculture) as internal students for the Academic Year 2019/2020

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the University.
   OR
   Any other qualification, as may be recognized by the Faculty Board and the Senate.
   AND
2. Diploma in Agriculture (of not less than 2 years duration) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining the Diploma in Agriculture.

**Age:** Candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Application forms may be obtained from the Deputy Registrar, Admissions Branch, University of Jaffna, on a payment of Rs.100/- each at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs.100/- drawn in favour of the Bursar and envelope not less than 9"x 4" size (with stamp for Rs. 5.00).

**Closing date is 31st December 2020**

No application will be entertained after the closing date of application.

Applications should be forwarded through the relevant Heads of Department to Deputy Registrar, Admission Branch University of Jaffna, Thirunelvely or Assistant Registrar, Faculty of Agriculture, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi. Applications which are not routed through the official channel will be rejected.

Selected candidates will be called to sit for a Written Test and an Oral Examination.

**REGISTRAR**

# 30வது ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு | பிறப்பு | இறப்பு |
|---|---|---|---|
| 29.09.1919 | 14.12.1990 | 06.12.1931 | 01.12.2009 |

அமரர்
**சபாபதி நாகராசா** | **தாட்சாயினி நாகராசா**

30 ஆண்டு நினைவில் எம்
மனதின் நினைவிலிருந்து

ஆண்டுகள் எத்தனை பிரிவினில் கடந்தாலும்
சான்றுகளாய் உங்கள் நினைவோடு நாங்கள்
நீங்கள் வாழ்ந்த காலச் சாதனைகளுக்கு
சாட்சியாய் மாறும் எங்கள் வாழ்வு
நினைவில் நீங்காத அன்புத் தெய்வத்திற்கு
நிதமும் வந்தனை செய்து வணங்குகின்றோம்.

பொற்பதி லேன்,
கொக்குவில் கிழக்கு.

அன்புடன் நினைவில் மறவா
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 10 . 1946



இறப்பு 13 . 12 . 2020

### அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ்

கௌதாரிமுனை பூநகரியை பிறப்பிடமாகவும் முக்கொம்பன் பூநகரியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் அவர்கள் நேற்று (13.12.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பிரான்சிஸ் பூமணியின் கணவரும், காலஞ்சென்ற ரதி, கிளி ஆகியோரின் சகோதரனும், யேசுராசா, திரேசம்மா, சரோ, பெனடிற், ராசன், வசந்தா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, சின்னக்கிளி ஆகியோரினதும் ரத்தினம், மகேஸ்வரி, ராசமலர், தெய்வேந்திரம், ராஜேஸ்வரி ஜோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனனும், காலஞ்சென்ற அன்னக்கிளி, அகஸ்ரின், செபஸ்ரின், பிரதி ஆகியோரினதும், யஸ்ரின், அனிதா, கிஸ்ரின், இரத்தினேஸ்வரி, ஜெயசீலி ஆகியோரின் தகப்பனாரும், அனஸ்ரின், அன்ரன் அல்பிரட், குமுதா, வவி ஆகியோரது மாமனாரும், அஜித் டார்வின், அஜினத், அஜித்தனா, அஜினோட், அஜிஸ்ரா, ஜெனிஸ்ரன், ஜெரினா, ஜெனித்தா, ஜெனித்திகன், டெஞ்சன், டிலக்ஷன், அருண், அக்ஷயன் ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2020) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஐந்தடிவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 10 . 1966



இறப்பு 12 . 12 . 2020

### தாவிது யேசுராசா (குணம்)

இராஜசிங்கம் வீதி திருநகரை பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட தாவிது யேசுராசா (குணம்) கடந்த (12.12.2020) சனிக் கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (14.12.2020) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0777 176 998
075 900 9007

தகவல்:
**குடும்பத்தினர்.**

# ஊடகரைத் தூக்கிட்டது ஈரான் உலகமெங்கும் கடும் எதிர்ப்பு!

தெஹ்ரான், டிசெ. 14

**அரசுக்கு எதிரான போராட்டத்தைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டில் ஊடகவியலாளர் ஒருவரை ஈரான் அரசு தூக்கிலிட்டுள்ளது. இதையடுத்து ஈரானுக்கு உலகமெங்கும் கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.**



ஈரானைச் சேர்ந்த ருஹோல்லா ஜாம் என்பவர் 'அமட்நியூஸ்' என்ற பெயரில் இணையதள பத்திரிகையை நடத்தி வந்தார். இந்தப் பத்திரிகையில் ஈரான் அரசுக்கு எதிரான செய்திகள் தொடர்ந்து வெளிவந்தன. எனவே ஈரான் அரசு இந்த இணையதள பத்திரிகையை முடக்கியது. ஆனாலும் ருஹோல்லா ஜாம் வேறு பெயரில் இணையதள பத்திரிகையைத் தொடங்கி தொடர்ந்து அரசுக்கு எதிரான செய்திகளை வெளியிட்டு வந்தார். கடந்த 2017ஆம் ஆண்டு விலைவாசி உயர்வைக் கண்டித்து அரசுக்கு எதிராக பெரும் போராட்டம் வெடித்தது. இதையடுத்து பொய்யான செய்திகள் மூலம் போராட்டத்தைத் தூண்டினார் என அவர் மீது ஈரான் அரசு வழக்கு பதிவு செய்தது. அவர் மீதான வழக்கை விசாரித்த ஈரான் நீதிமன்றம் அவருக்கு தூக்கு தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்தநிலையில், தலைநகர் தெஹ்ரானில் உள்ள சிறையில் அவர் நேற்று முன்தினம் தூக்கிலிடப்பட்டார். இதற்கு சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு கண்டனம் தெரிவித்து ள்ளது. (மவஇ)

வொஷிங்டனில் பரபரப்பு

# காந்தி சிலை மீது காலிஸ்தான் கொடி




வொஷிங்டன், டிசெ.14

இந்திய அரசு கொண்டு வந்துள்ள விவசாய சட்டங்களைத் திரும்பப்பெற வலியுறுத்தி டெல்லியில் விவசாயிகள் நடத்தும் தொடர் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அமெரிக்காவின் தலைநகர் வொஷிங்டனில் அமைந்துள்ள இந்திய தூதரகம் பலர் திரண்டனர்.

இதன்போது அங்கிருந்த சிலர் காலிஸ்தான் கொடியை காந்தி சிலை மீது போர்த்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. அமைதி மற்றும் நீதிக்கான உலகளாவிய மரியாதைக்குரிய அடையாளமான காந்தி சிலை மீது காலிஸ்தான் கொடியை போர்த்தியதற்கு கண்டனம் தெரிவித்துள்ள இந்திய தூதரகம் இது தொடர்புபட்டவர்கள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளது.

ஏற்கனவே, கடந்த ஜூன் மாதம் கறுப்பின இளைஞர் ஜோர்ஜ்பிளொய்ட் கொல்லப்பட்டதை எதிர்த்து நடந்த போராட்டத்தில் காந்தி சிலை சேதப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-வ-இ)

# 2020 இன் சிறந்த நபர்களாக பைடன், ஹாரிஸ்




நியூயோர்க், டிசெ. 14

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றுள்ள ஜோ பைடனும், கமலா ஹாரிஸும் இந்த ஆண்டின் சிறந்த நபர்களாக டைம் இதழில் இடம்பிடித்துள்ளனர்.

அட்டைப் படத்தில் அவர்களது புகைப்படத்தை வெளியிட்ட டைம் இதழ், அமெரிக்காவின் கதையை மாற்றியவர்கள் என்று குறிப்பிட்டுள்ளது. மேலும் அமெரிக்கத் தேர்தலை ஜோ பைடனும், கமலா ஹாரிஸும் எவ்வாறு கையாண்டார்கள் என்பது குறித்து டைம் இதழ் பாராட்டி எழுதியுள்ளது. காலநிலை மாற்றத்துக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுத்து வரும் கிரெட்டா தன்பெர்க், டைம் இதழின் 2019ஆம் ஆண்டுக்கான சிறந்த நபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (மவஇ)



பதவியேற்கும் நாளில்

# பருவநிலை ஒப்பந்தத்தில் அமெரிக்கா இணையும்!!

பைடன் உறுதி

வொஷிங்டன், டிசெ.14

பரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணையும் என அந்த நாட்டின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

புவி வெப்பமடைதலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று ஒப்பந்தத்தின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்ட அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். தான் ஜனாதிபதியாகப் பதவியேற்கும் முதல் நாளிலேயே மீண்டும் பரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில் அமெரிக்கா சேரும் என உறுதிஅளித்துள்ள அவர், பொருளாதார வல்லுநர்களுடன் இது தொடர்பில் கலந்து பேசவுள்ளேன் என குறிப்பிட்டார். பரிஸ் காலநிலை ஒப்பந்தம் அமெரிக்காவுக்கு பொருளாதார ரீதியாக இழப்பையும், பல லட்சம் பேருக்கு வேலையிழப்பையும் ஏற்படுத்துகிறது எனக்கூறி அதிலிருந்து அமெரிக்கா விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம.வ.இ)

தடுப்பு மருந்தை

# வாங்கிக் குவிக்கும் பணக்கார நாடுகள்



வொஷிங்டன், டிசெ.14

பணக்கார நாடுகள் நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் பலமுறை செலுத்தும் வகையில் கொரோனாத் தடுப்பு மருந்துகளை வாங்கிக் குவித்து வருகின்றன என ஆய்வில் தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவின் டியூக் பல்கலைக்கழகக் குழுவினர் கொரோனா தடுப்பு மருந்து வாங்குவதில் பணக்கார நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் உள்ள இடைவெளி தொடர்பில் ஓர் ஆய்வை நடத்தியுள்ளனர். அதில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது. பணக்கார நாடுகளால் இதுவரை முந்நூறு கோடி முறை செலுத்தும் அளவுக்கு தடுப்பு மருந்துக்கான முன்பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் ஏழை நாடுகளுக்கு தடுப்பு மருந்து கிடைப்பதற்கான வாய்ப்பு குறைந்துள்ளது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். உலக மக்கள் தொகையில் 14 வீதத்தை மாத்திரமே கொண்ட நாடுகள் தடுப்பு மருந்தில் பாதிக்கும் அதிகமானதை வாங்கி இருக்கின்றன என மக்கள் தடுப்பு மருந்து கூட்டணி என்ற அமைப்பு அண்மையில் குறிப்பிட்டிருந்தது. (வ-இ)

## விற்பனைக்கு

யாழ் பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் 3 பரப்பில் அமைந்த காணியும் வீடும். கொக்குவில் சந்திக்கு அண்மையில் 2 1/2 பரப்பு காணியும் வீடும். யாழ் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் 10 பரப்பு காணியும் வீடும். யாழ் கந்தர்மட சந்திகது அண்மையில் 3 பரப்பு காணியும். யாழ் பிறவுண் வீதியில் 6 பர்ப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0777 232 535

# தீவுப் பகுதியிலுள்ள மக்களுக்கு மேலதிக கொடுப்பனவு வேண்டும்

யாழ். மாவட்டச் செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.14

வீட்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் தீவுப் பகுதிக்கு மேலதிகமான கொடுப்பனவு ஏதாவது கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். தேசிய வீடமைப்பு அதிகார சபையால் செயற்படுத்தப்படும் ஒரு கிராமத்துக்கு ஒரு வீடு வேலைத்திட்டத்தில் 5ஆம் கட்டமாக யாழ் மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் 84 பேருக்கு யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் காசோலை வழங்கப்பட்டது. இந்த



நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது; தேசிய வீடமைப்பு அதிகார சபையிடம் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகின்றேன். தீவுப் பகுதி மக்களுக்கு ஏனைய பிரதேசங்களை விட செலவு அதிகமாகக் காணப்படுகின்றது அதாவது மணல் மற்றும் ஏனைய கட்டப் பொருள்களைப் பெறுவதற்கான செலவு ஆகியன தீவுப் பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே தீவுப் பகுதி நிலைமையும் சற்று வித்தியாசமானது. எனவே அவர்களுக்கு வீட்டுத் திட்ட நிதியைக் கொடுக்கும் போது மேலதிகமான கொடுப்பனவு ஏதாவது கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். (ப)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. இராசரெத்தினம் ஸ்ரீஸ்கந்தராஜா

(சிரேஸ்ட கிராம அலுவலர் ஊர்காவற்துறை பிரதேச செயலகம்)

Congratulations

கடந்த 27 வருடங்களாக ஊர்காவற்துறை பிரதேச செயலகத்தின் பல கிராம அலுவலர் பிரிவுகளில் சேவை மனப்பாண்மையுடன் சிறப்பாக கடமை புரிந்து இன்று (14.12.2020) அகவை 60 பூர்த்தி செய்யும் திரு. இராசரெத்தினம் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் ஓய்வுகாலத்தில் கந்தன் தொண்டாற்ற கர்ணத்தோட்ட கந்தனை பிரார்த்திக்கிறோம்.

நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்துறை.

வாழ்த்துவோர்: உறவினர்கள்.

## மணமகனுக்கு கொரோனா பெண்ணுக்குச் சுயதனிமை

கொழும்பு, டிசெ.14

மணமகனுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை மணமகள், உள்ளிட்ட அவரது குடும்பத்தினர் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதுடன், இரத்தினபுரி உக்வத்தை பகுதியிலுள்ள 10 வீடுகள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், திருமண நிகழ்வில் கலந்துகொண்ட பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட 45 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று கொடகவெல சுகாதார மருத்துவ அதிகாரி இந்திகா குணதாஸ தெரிவித்துள்ளார். சுய தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் ஊடாக, நால்வருக்கு நேற்றுமுன்தினம் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனால், இறக்குவானை - உக்வத்தை பகுதி தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது (ப)

## துயர் பகிர்கிறோம்



மலர்வு 15 . 11 . 1934

மாரியாச்சியின் பாதத்தில் 06 . 12 . 2020

### சின்னத்தம்பு சிவபாதசுந்தரம்

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவரும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான சின்னத்தம்பு சிவபாதசுந்தரம் இறைபாதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகிறோம். அன்னார் கீரிமலை ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் (மாரியாச்சி) மீது அதிகபத்தி கொண்டவரும் தேர்த் திருவிழா உபயகாரரும் ஆவார். அவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முத்துமாரி அம்பாளை பிரார்த்திக்கிறோம்.

சிவசிறி.ந.உமாபதீஸ்வர குருக்கள்
ஆதீனகர்த்தாவும்,
புனருத்தாரண சபையினரும்,
கீரிமலை ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள்
தேவஸ்தானம்.

## ஜெனிவா....

இலங்கை விவகாரம் தொடர்பிலும் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

கூட்டத்தொடருக்கான நாள் அறிவிக்கப்பட்டிருந்தாலும் நேரடியாக நடைபெறுமா அல்லது நவீன தொழில்நுட்பம்மூலம் நடத்தப்படுமா என்பது பற்றிய அதிகாரப் பூர்வ அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை.

எனினும் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பில், மனித உரிமைகள் மாநாட்டில் பிரேரணையொன்று முன்வைக்கப்படும் என்று மேற்குலக நாடுகளின் தூதுவர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர். வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவை அண்மையில் நேரில் சந்தித்து பேச்சு நடத்தியபோது இந்த விடயத்தை அவர்கள் குறிப்பிட்டனர் எனவும் இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு வழங்கிய இணை அனுசரணையில் இருந்து இலங்கை விலகியுள்ள நிலையிலேயே, அடுத்தக் கட்ட நகர்வாக மேற்குலக நாடுகள் குறித்த பிரேரணையை முன் வைக்கவுள்ளன என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் இராஜதந்திர நெருக்கடிகளை சமாளிப்பது தொடர்பில் தீவிரமாக ஆராய்ந்துவரும் இலங்கை அரசு, ஜெனிவா தொடருக்கு முன்னர் முக்கியமான சில தீர்மானங்களை எடுக்கலாம் என்று தெரியவருகின்றது.

இதன்பிரகாரம் மார்ச் மாதத்துக்கு முன்னர் மாகாண சபை தேர்தலை நடத்துதல், புதிய அரசமைப்பில் அதிகாரப்பகிர்வுக்கு இணங்குதல் உள்ளிட்டவை இதில் உள்ளடங்கும்.

அதேவேளை, ஐ.நா. பொதுச் செயலாளரின் முக்கியமான தொரு செய்தியுடன் ஐ.நாவின் அரசியல் பிரிவு தலைவர் ரோஸ்மேரி டிகார்லோவே ஜனவரியில் கொழும்பு வரவுள்ளார் என இராஜதந்திர மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ் வருடமே அவர் இலங்கை வரவிருந்த நிலையில் பயணம் தற்காலிகமாக ஜனவரி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட விவகாரம் பற்றியும் மனித உரிமைகள் மாநாட்டில் பேசப்படவுள்ளது. இதுவரைகாலமும் இலங்கைக்கு ஆதரவு தெரிவித்து வந்த அரபுலகம், இந்த விடயத்தில் கொழும்பை எதிர்த்து நிற்கும் நிலைமை உருவாகியுள்ளது. (ஒ.44)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி- 45 ரூபாய்
தொடர்பு: 077 334 1281

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 06 . 05 . 1943

விண்ணில் 14 . 11 . 2020



கடந்த (14.11.2020) அன்று சிவபதமடைந்த

### அமரர் தங்கம்மா கந்தையா

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர் நண்பர்கள் மற்றும் அயலவர்களுக்கும் பல்வேறு வகைகளில் இறுதி நிகழ்வில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றி தெரிவித்து கொள்கின்றோம்.

தற்போது நிலவும் கொவிட்-19 சூழ்நிலை மற்றும் நடைமுறைகள் காரணமாக அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை மற்றும் வீட்டுக்கிருத்திய நிகழ்விற்கு தங்களை அழைக்க இயலாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

கெற்பேலி மேற்கு, மிருசுவில்.

மகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### செல்லையா விஜயரட்ணம்

(முருகன் திருமண சேவை)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா விஜயரட்ணம் நேற்று முன்தினம் (12.12.2020) சனிக்கிழமை காலமானார். அன்னார் செல்லையா தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும், கனகாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற விமலாதேவி, கணேசலிங்கம், கோணேசலிங்கம் யோகலிங்கம், ஆனந்தாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசமலர் பத்மாவதி சுஜிதரன் (வலம்புரி T.C நவாலி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுபாங்கன் சுபகீர்த்தன், சுலக்சன் (பொலிஸ் உத்தியோகத்தர், அம்பாறை), ஆருஷன் (A/L 2022 கணிதப் பிரிவு, மானி/இந்துக் கல்லூரி) சன்ஷிகா (தரம் 4, ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கொரோனா...

கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழுந்தவர்களின் எண்ணிக்கை 152 ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை, கொரோனாவின் மூன்றாவது அலையில் மட்டும் 139 பேர் உயிரிழுந்துள்ளனர். (எ-22)

## யாழ்ப்பாணத்தில்...

கடந்த வெள்ளிக்கிழமை மருதனார்மடம் சந்தை வர்த்தகர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அந்தப் பகுதியில் உள்ள முச்சக்கர வண்டிச்சாரதிகளுக்கு எழுமாறாக நடத்தப்பட்ட பி.சி.ஆர். சோதனையிலேயே தொற்றாளர் கண்டுபிடிக்கப்பட்டார். அவருக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பது இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

அதையடுத்து மருதனார்மடம் சந்தை வியாபாரிகள் மற்றும் அவர்களின் உறவினர்கள் என 394 பேருக்கு நேற்று முன்தினம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவுகள் நேற்றுமுன்தினம் மாலை வெளியான நிலையில், முதலில் 31 பேருக்குத் தொற்று என்று தகவல் வெளியான போதும், 6 பேருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் அறிவித்திருந்தார்.

தொற்றுடன் இனங்காணப்பட்டவரின் குடும்ப உறுப்பினர்கள் 6 பேருக்கே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அவர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இயங்கும் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டனர்.

இந்தநிலையில் மருதனார்மடம் சந்தையுடன் தொடர்புடைய 26 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி அறிவித்தார்.

யாழ்ப்பாணத்தின் பல இடங்களைச் சேர்ந்தவர்களே தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

நாவற்குழி தெற்கு, சங்கானை, பண்டத்தரிப்பு, உரும்பிராய், நவாலி, உடுவில், மாவைக் கலட்டிதெல்லிப்பழை,

கிழக்கை தெல்லிப்பழை, கீரிமலை (இருவர்), அளவெட்டி தெற்கு, உடுவில் கிழக்கு, அளவெட்டி, சுன்னாகம் மேற்கு, இளவாலை வடக்கு, சுன்னாகம், இணுவில், மானிப்பாய் (இருவர்), மயிலிட்டி, ஏழாலை (இருவர்), நவக்கிரி, இணுவில், கொக்குவில், சண்டிலிப்பாய் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். (எ-26)

## எத்தனை....

அன்றைய தினம் 36 கொரோனாத் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் என்று தேசிய கொரோனா ஒழிப்புச் செயலணி அறிவித்துள்ளது. அதனால் மக்களிடையே குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளது.

மருதனார்மடம் சந்தையுடன் தொடர்புடையவர்களுக்கு நேற்றுமுன்தினம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த முடிவுகள் நேற்றுமுன்தினம் மாலை வெளியானது. 31 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று முதலில் தகவல் வெளியானது. எனினும் 6 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் அறிவித்திருந்தார்.

எனினும் நேற்றுக் காலை தேசிய கொரோனா ஒழிப்புச் செயலணி வெளியிட்ட அறிக்கையில் கடந்த 24 மணி நேரத்தில் வடக்கு மாகாணத்தில் 36 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த எண்ணிக்கை முரண்பாடு தொடர்பாக மக்களிடையே குழப்பம் காணப்பட்டபோதும், உரிய தரப்புகள் அதைத் தெளிவுபடுத்தவில்லை. (எ-இ)

(எ-26)

## இந்திய....

இழுவைப்படகுகள் மோதினால் எமது சிறிய படகுகள் மூழ்கிவிடும். இரண்டு தரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்படும். அதற்கு இரண்டு நாட்டு அரசுகளும்தான் பொறுப்புக்கூறவேண்டும். இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் ந.வர்ணகுலசிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய மீனவர்கள் அத்துமீறல் தொடர்பில் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்களின் சமாசத்தின் உறுப்பினர்களுடன் நேற்று இடம்பெற்ற கூட்டத்தின் பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்திய மீனவர்கள் இழுவைப்படகுகளுடன் பருத்தித்துறை கரையிலிருந்து 3 கிலோ மீற்றர் தூரம் வரை வந்து எமது மீனவர்களை விரட்டியடித்துவிட்டு தொழிலில் ஈடுபடுகின்றனர். எமது மீனவர்களின் வலைகளை அறுத்து நாசம் செய்கின்றனர். இதனால் வடமராட்சி மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். கூலி வேலைக்குச் செல்லும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். பலர் நாளாந்த வாழ்க்கையைக் கழிப்பதற்கே அவதிப்படுகின்றனர்.

எனவே இந்திய மீனவர்களின் அத்துமீறல் அட்டூழியங்களை இனியும் பொறுத்திருந்து பார்க்க முடியாது. அவர்களுக்கு அஞ்சி உயிரைக் கையில் பிடித்து க்கொண்டு தொழிலில் ஈடுபட எமது மீனவர்களால் முடியாது.

அதனால் வடமராட்சி வடக்கு மற்றும் கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்கள் இணைந்து அனைத்து மீனவர்களும் கடலில் இறங்கி இந்திய மீனவர்களுடன் கைகலப்பில் ஈடுபடுவதே இறுதித் தெரிவாக உள்ளது.

இந்திய மீனவர்களை விரட்டி விரட்டி அடிப்போம். அவர்களின் இழுவைப்படகுகள் மோதினால் எமது சிறிய படகுகள் மூழ்கிவிடும். இரண்டு தரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்படும். அதற்கு இரண்டு நாட்டு அரசுகளும்தான் பொறுப்புக்கூற வேண்டும், என்றார். (ஓ,26)

## தொற்று...

யும். அதிகாரிகளும், தொற்றாளர்களும் சமூகத்தின் நன்மை கருதிப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 24 மணி நேரத்தில் (நேற்றுக் காலையில்) கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 36 என்று கொரோனா தடுப்புக்கான செயலணி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தனது முகநூலில் வெளியிட்ட பதிவில் யாழ்ப்பாணத்தில் 6 பேருக்கே நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது என்று கூறியிருந்தார். தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்ற பதிவுமிட்டிருந்தார். எண்ணிக்கை குழப்பம் தொடர்பில் கொரோனா தடுப்புச் செயலணியின் தலைவரான சவேந்திர சில்வாவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

அந்தந்த மாவட்டங்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையைப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மறைப்பதும், தொற்றாளர்கள் தலைமறைவாகித் திரிவதும் குற்றமாகும். அதிகாரிகளும், தொற்றாளர்களும் அசமந்தப் போக்கில் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் முடியும். அதிகாரிகளும் தொற்றாளர்களும் சமூகத்தின் நன்மை கருதிப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று 36 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆனால், 6 பேர் மட்டுமே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டார்கள் என்று ஊடகங்களில் வெளிவந்த செய்தி தவறானது.

ஊடகங்களுக்குப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், தொற்றாளர்களின் எண்ணிக்கையை ஏன் குறைத்து தகவல் வழங்கினார்கள் என்பது தொடர்பில் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் கவனம் செலுத்தும். கொரோனா என்பது கொடிய நோய். இந்த விடயத்தில் மருத்துவமனை நிர்வாகத்தினரும், சுகாதாரப் பிரிவினரும் மற்றும் பொதுமக்களும் மிகவும் அவதானத்துடனும் பொறுப்புடனும் நடக்க வேண்டும்.

பிறக்கின்ற புத்தாண்டு கொரோனா இல்லாத ஆண்டாகப் பிறக்க வேண்டும் என்பதே அனைவரினதும் பிரார்த்தனையாக இருக்க வேண்டும்என்றார். (ஓ,5,22)

## நீக்கப்பட்டது....

த்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது-

மருதனார்மடம் பொதுச் சந்தை மற்றும் அதை அண்டிய வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மறு அறிவித்தல்வரை தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டால் அவர்களது குடும்பத்தையும், அவர்களுடன் தொடர்புடையவர்களையும் வீடுகளில் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை சுகாதா ரத்துறையினர் முன்னெடுப்பா ர்கள்.

பி.சி.ஆர். முடிவுகளின் அடிப்படையில் இனங்காணப்பட்ட தொற்றாளர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என 398 குடும்பங்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி பொதுமக்கள் சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும் - என்றார்.

## தொற்றாளர்களின்...

ரிழப்பவர்களின் எண்ணிக்கையையும் மறைப்பதற்கு நாம் இடமளிக்கமாட்டோம் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை தொடர்பான குழப்பம் மற்றும் அதனை அறிவிப்பது தொடர்பான குழப்பம் என்பன தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

ஒவ்வொரு மருத்துவமனை நிர்வாகமும் தத்தமது மருத்துவமனையில் நாளாந்தம் அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையை அந்தந்த மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கு அறிவிக்க வேண்டும்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தத்தமது மாகாணங்களில் நாளாந்தம் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையை சுகாதார அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும். சுகாதார அமைச்சு, அனைத்து மாகாணங்களிலும் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையை கொரோனாத் தடுப்பு தேசிய செயற்பாட்டு மையத்துக்கும் அரச தகவல் திணைக்கள அலுவலகத்துக்கும் நாளாந்தம் அறிவிக்கும்.

அதனடிப்படையில் ஒவ்வொரு நாளும் இரவும் 10 மணிக்குப் பின்னர் நாடளாவிய ரீதியில் அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கையும், உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கையும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும். இதுதான் நடைமுறை. இந்த நடைமுறை வடக்கு மாகாணத்தில் மீறப்படுகின்றதா என்பது தொடர்பில் நாம் ஆராய்ந்துதான் பார்க்க வேண்டும் என்றார். (ஓ,5,22)

## 39 பேருக்கு....

பல்கலைக்கழக மாணவர்கள், முச்சக்கர வண்டிச் சாரதிகள் என்று எழுமாறாக 39 பேரிடம் பி.சி.ஆர். மாதிரிகள் நேற்றுப் பெறப்பட்டுள்ளன.

மருதனார்மடம் கொத்தணியின் எதிரொலியாக, பல்வேறு இடங்களிலும் எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ஓ,5)

## 398...

அனைவரும் குடும்பத்துடன் இரண்டு வாரங்கள் சுயதனிமைப்படுத்தப்படுவார்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மருதனார்மடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தொற்றாளர் ஒருவர் இனங்காணப்பட்டிருந்தார். அவர் எழுமாற்றுச் சோதனையின்போதே தொற்றாளராக கண்டறியப்பட்டிருந்தார். இதனையடுத்து மருதனார்மடம் பொதுச்சந்தை வியாபாரிகள், தொற்றாளரின் உறவினர்கள் என்று 398 பேரின் மாதிரிகள் பெறப்பட்டிருந்தன.

பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்ட அனைவரும் அவர்களது குடும்பங்களுடன் இரண்டு வாரங்களுக்கு சுயதனிமைப்படுத்தப்படுவார்கள் என்றும், அதன் பின்னர் மீளவும் பி.சி.ஆர். சோதனை அவர்களுக்கு முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஓ,5)

## உடுவில்....

வருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, அங்கு மேலும் பல கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதையடுத்தே பாடசாலைகளை மூடும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உடுவில் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட 33 பாடசாலைகளும், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட 40 பாடசாலைகளும் மறு அறிவித்தல்வரை மூடப்படுகின்றன. (எ)

## 655...

இதுவரையில் 29 ஆயிரத்து 152 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 32 ஆயிரத்து 790 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 23 ஆயிரத்து 793 பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 848 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

# அரையிறுதியில் காலி வெற்றி

கொழும்பு, டிசெ.14

லங்கா பிரீமியர் லீக் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் காலி கிளாடியேற்றர்ஸ் அணி இரண்டு விக்கெட்டுகளால் வெற்றியை தம்வசப்படுத்தியுள்ளது.

கொழும்பு கிங்ஸ் அணிக்கு எதிரான இந்தப் போட்டி அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ச சர்வதேச மைதானத்தில் நேற்று இரவு நடைபெற்றது.

இந்தப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற காலி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அணிசார்பாக, டிபெல்ட்ரம்மண்ட் 70 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில், சந்தகன் மூன்று விக்கெட்டுகளையும் என்.துசார மற்றும் தனஞ்சய லக்சன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். சஹன் ஆராச்சிகே மற்றும் எஸ். ஜெயசூர்ய ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்



151 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய காலி அணி 19.5 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்து இரண்டு விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

அணிசார்பாக, பானுக ராஜபக்ச 33 ஓட்டங்களையும், தனஞ்சய லக்சன் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் செஹான் ஜெயசூர்ய 22 ஓட்டங்களையும் அஷாம் கான் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில், அசான் பிரியஞ்சன் இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றியதுடன் அஞ்சலோ மத்தியூஸ், துஷ்மந்த சமீர, குயிஸ் அகம்மட் மற்றும் திக்ஷில டி சில்வா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர் இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக தனஞ்சய லக்ஷன் தெரிவுசெய்யப்பட்டார்.

இதேவேளை, லங்கா பிரீமியர் லீக் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டி நாளை நடைபெறவுள்ளதுடன், இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் ஸ்டாலியன்ஸ் மற்றும் தம்புள்ள வைக்கிங்ஸ் அணிகள் மோதவுள்ளன. (எ)

ஏசியன் தளபாடம்
மாபெரும் மலிவு விற்பனை
230 நாவலர் வீதி, இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திக்கும் இடையில் யாழ்ப்பாணம்.
077 358 3879, 076 826 9416

காணி விற்பனைக்கு
இருபாலை கிழக்கு C.C. பாடசாலை வீதியில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். (தரகர் தேவை இல்லை)
076 640 0974
077 805 1655

## இலங்கை - தென்னாபிரிக்கா டெஸ்ட்டுக்கு பச்சைக்கொடி!

கொழும்பு, டிசெ.14

இலங்கை மற்றும் தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை திட்டமிட்டபடி நடத்துவதற்கு இரு நாட்டு அதிகாரிகளும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, எதிர்வரும் டிசம்பர் 26 ஆம் திகதி இந்தப் போட்டித் தொடர் ஆரம்பமாகவுள்ளது.


இந்த போட்டிகள் தென்னாபிரிக்காவின் செஞ்சூரியன் மற்றும் ஜோகன்னஸ்பேர்க் மைதானங்களில் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, கடந்த மார்ச் மாதத்தில் ஒத்திவைக்கப்பட்ட இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை ஜனவரியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

தேவை

நல்ல நிலையில் உள்ள
Canon 6D Full Frame Camera மற்றும்
DSLR Camera எந்த வகையானாலும் தேவை
தொடர்புகளுக்கு 0767374444

## கண்ணீர் அஞ்சலி



### பாலச்சந்திரலால் பிரதீபன்

அவர்கள் நேற்று (13.12.2020) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கிறோம்.

**நண்பர்கள்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 05 . 1944



மறைவு 09 . 12 . 2020

### திருமதி மனோரஞ்சிதமலர் இளம்பூரணன்

ஏழாலை மத்தியை பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வதிவிடமாகவும் 16, யங்ஸ்டார் ரெயில்பிரம்ரன் (16, Youngestar trail, Bramton) ஒன்ராறியோவில் (Ontario) வசித்து வந்தவருமான திருமதி மனோரஞ்சிதமலர் இளம்பூரணன் 09.12.2020 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து அருளம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் இளம்பூரணன் (பாலச் சந்திரன்) அன்பு மனைவியும், மனோரஞ்சன், ஜெயச்சந்திரா, சுபாஷ் சந்திரா, ரவிச்சந்திரா, சரத்சந்திரா, சங்கீதா ஆகியோரின் பாசமிகு தாயும், சுமதி, மீனலோசினி, கரன்யா ஆகியோரின் அன்பு மாமியும், யோகமலர் (கிளி) யோகலிங்கம், நித்தியானந்தம் (செட்டி), ஆனந்தராசா (ஆசைக் கிளி) மற்றும் காலஞ்சென்ற யோகராணி (சித்தா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சாரதாதேவி மற்றும் இளமுருகன் (மணி), மனோன்மணி (சத்தியேஸ்வரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஆதிரன், அபிதன், அபூர்வன், ஏஞ்சல், எமிலி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
இளம்பூரணன் (பாலச்சந்திரன்)
+1 416 500 1491